சரஸ்வதி

ஆசிரியர். வ. விஜயபாஸ்கரன்

சரஸ்வதி

ஆசிரியர்: வ. விஜயபாஸ்கரன்

கைவ ருத்தி உழைப்பவர் தெய்வம்
கவிஞர் தெய்வம், கடவுளர் தெய்வம் —பாரதி.

மலர் 2 | செப்டம்பர் 1956 | துன்முகி
இதழ் 9 | | ஆவணி

உள்ளே

ஜனசக்தி வாழ்க!	... தலையங்கம்	3
முக்காலமும் உணர்ந்த மாயக்குயில்	... ஆர். கே. கண்ணன்	5
குட்டிக்கதை	... ஈசாப்	12
தேயிலைத் தோட்டத்திலே (கவிதை)	... 'அருட்கவி ராயர்'	13
வியாழன் (விஞ்ஞானக் கட்டுரை)	... அ. நடராஜன்	17
நந்த காவியம் (சிறு கதை)	... டி. செல்வராஜ்	21
புதுமைப்பித்தன்	... தி. க. சிவசங்கரன்	25
பூ வாங்கலியா பூ...(சிறுகதை)	... ஜெயகாந்தன்	33

★

தனிப்பிரதி விலை அணா 2. ஆண்டு சந்தா ரூ. 1—8—0

★

படித்துவிட்டீர்களா ?

1.	கம்பனும் பாரதியும்—ஜீவா ...	0	4	0
2.	பாரதி பாடல்கள் (தொகுப்பு)-ஜீவா...	1	0	[illegible]
3.	கம்பனும் மில்டனும் —எஸ். ராமகிருஷ்ணன் ...	2	0	0
4.	கம்பன் கண்ட தமிழகம் —சாமி சிதம்பரனூர்	2	4	0
5.	தொல்காப்பியத் தமிழர் —சாமி சிதம்பரனூர்	2	4	0
6.	சேற்றில் மலர்ந்த செந்தாமரை —ரகுநாதன்	2	0	0
7.	நவசீனக் கதைகள்—ரகுநாதன்	0	12	0
8.	கூண்டுக்கிளி —ஹரீந்திரநாத் சட்டோபாத்தியாயா	1	0	0
9.	மா சே-துங் பாலியமும் வாலிபமும் (தமிழில்)—முகவை ராஜமாணிக்கம்	0	12	0
10.	நமது பாசறை—மாஜினி	0	6	0

வியாபாரிகளுக்குத் தக்க கழிவு உண்டு

கிடைக்குமிடம்: **நியூ செஞ்சுரி புக் ஹவுஸ்**
199, மவுண்ட்ரோடு, சென்னை-2

தலையங்கம்

"ஜனசக்தி" வாழ்க!

வாரப் பத்திரிகையாக இருந்துவந்த 'ஜனசக்தி' தினசரிப் பத்திரிகையாக ஆகஸ்டு 15-ம் தேதியிலிருந்து வெளி வருகிறது.

ஜனநாயகத்தையும், ஜனநாயகத்தின் வளர்ச்சியையும் விரும்பும் அத்தனை மக்களும் இந்நிகழ்ச்சியை மனப்பூர்வமாக வரவேற்கின்றனர். இதற்கு அத்தாட்சியாக அன்று செயின்ட் மேரீஸ் மண்டபத்தில் நடந்த விழாவில் திரு. ராஜாஜி, காமராஜ் முதலான பல கட்சித் தலைவர்களும், கட்சிச் சார்பற்ற பிரமுகர் களும், பலதரப்பட்ட ஜனப்பகுதிகளும் ஆர்வத்துடன் கலந்து கொண்டது குறிப்பிடத் தக்கது.

'ஜனசக்தி' தினசரியானது தமிழ்நாட்டுக்கிருந்த ஒரு பெருங்குறையை நீக்கிவிட்டது. ஆட்சியிலிருப்பது ஒரு கட்சி; அதைத் துதிபாடுவதும் அதே கட்சிச் சார்புள்ள தின ஏடுகள்; அவை மனமிரங்கிப் பிரசுரித்தால்தான் பிரதான எதிர்க்கட்சி யின் குரல் மக்கள் காதில் விழக்கூடும்; இல்லாவிட்டால் இல்லை—என்ற நிலைமை மாறி, இப்பொழுது இருதரப்பினரின் வாதங்களையும், யோசனைகளையும், நடைமுறைகளையும் மக்கள் நடுநிலைமை வகித்து உடனுக்குடன் கேட்டு, தத்தம் முடிவுக்கு வர இடமேற்படுகிறது. இது ஜனநாயக வளர்ச்சிக்கு இன்றி யமையாதது.

குடியரசுச் சட்டத்தில் பத்திரிகைச் சுதந்திரம் எல்லோருக் கும் உண்டு என்று மட்டும் கூறப்பட்டுள்ளது; அது அமு லுக்கு வருவது மக்களின் விழிப்புணர்ச்சியைப் பொறுத்ததே என்பதற்கு 'ஜனசக்தி' நேர் சாட்சி. பணம் இருந்தால் பத்தி ரிகை; எவ்வளவு கொள்கைச் செல்வாக்கும், சேவைச் செல் வாக்கும் இருந்த போதிலும் பணம் இன்றேல் பத்திரிகையில்லை என்பதே நடைமுறைப் "பத்திரிகை சுதந்திரம்". அதிலும், இடதுசாரி வாடை, தொழிலாளி வாடை, ஒரு பத்திரிகையில் அடித்தால் அந்தப் பத்திரிகையை உருப்படாமல் அழிக்கச் சகல சனியன்களும் ஒன்று சேருகின்றன. இருந்தும் இப்படிப்

பட்ட பத்திரிகைகள் வாழத்தான் செய்கின்றன, வளரத்தான் செய்கின்றன என்றால் அது கடவுள் கிருபை என்று சொல்லுவதற்கில்லை, மக்கள் கிருபைதான் காரணம்; அதிலும் குறிப்பாக ஏழைத் தொழிலாளியும், விவசாயியும், குமாஸ்தாவும் தான் காரணம்; மற்றவர்களுக்கெல்லாம் வேண்டியது தினசரி அரை டஜன் பருவப் பெண் கதைகள், சினிமா ஸ்டார் செய்திகள், அந்தக்ஷணத்தில் சிரித்துப் பொழுதுபோக்க சில துக்கடா ஹாஸ்யங்கள். அவ்வளவேதான்,

இந்நிலையில் 'ஜனசக்தி' தினசரியானது எல்லா தீவிர ஜனநாயக வாதிகளுக்கும் உற்சாகமூட்டும். எது எப்படிப் போனாலும் காலம் கெட்டுவிடவில்லை, உலகம் முன்னேறத்தான் செய்கிறது—என்று நம்பிக்கை பிறக்கிறது. இந்த நம்பிக்கைதான் நமக்கெல்லோருக்கும் இருக்கிற முக்கியமான முதலீடு. இந்த நம்பிக்கையைப் பரஸ்பரம் வளர்த்துக் கொள்ளுவதே எல்லா ஜனநாயக, இடதுசாரிப் பத்திரிகைகளின் கடமை; நாட்டு நடப்பைப் பார்க்கையில் கடமைமட்டுமல்ல உரிமைகூடத்தான், என்று கொள்ள வேண்டியிருக்கிறது. ஜனநாயக, இடதுசாரிப் பத்திரிகை உலகிலே பத்திரிகைக்குப் பத்திரிகை சில சிறிய பெரிய விஷயங்களில் கருத்துவேறுபாடும் கண்ணோட்ட வேறுபாடும் கொண்டவையாயிருக்கலாம். என்றாலும் அவை ஒரே குடும்பத்தைச் சேர்ந்தவை யல்லவா? அவற்றிற்குள்ளே பரஸ்பர ஒத்துழைப்பும், ஆதரவும் இல்லாவிட்டால், பின்னே எதிரியா கை தூக்கிவிடப் போகிறான், கருணை காட்டப் போகிறான். விரலை மடக்குங்கள், எத்தனை எத்தனை முற்போக்கான பத்திரிகைகள் உதயமாகி அஸ்தமித்து உள்ளன!

இதர முக்கியமான பிரச்னைகளைப் போலவே, 'ஜனசக்தி' இந்தத் துறையிலும் முன் நின்று, பத்திரிகை உலகில் ஜனநாயக ஏடுகளின் ஸ்திதி-கதிகளில் அக்கறை செலுத்தி, அவற்றின் பொதுவான நலன்களைப் பேணுவதற்குப் பணியாற்றும் என்று மனப்பூர்வமாக நம்புகிறோம்.

★

செப்டம்பர் 11-ம் தேதி பாரதி தினம். தமிழரின் திருநாள்.

பாரதியை ஏன் கொண்டாடுகிறோம்? காரணம் இதோ?

முக்காலமும் உணர்ந்த மாயக்குயில்

ஆர். கே. கண்ணன்

முக்காலமும் உணர்ந்த மாயக் குயில், பாரதி.

பொருளும், நலனும் மிகுந்து புகழ் மண்டிக்கிடக்கும் புலவர்கள், தமிழிலக்கியத்தில் பலர் உண்டு. அவர்களின் அருந்தவப்புதல்வனாக, வழித்தோன்றலாக, ஞானபானுவாக, உதித்த பாரதியிடம் அவர்களுக்கெல்லாம் இல்லாத ஒரு அரிய சக்தி, முக்காலமும் அறியும் சக்தி, வந்து அடைந்தது.

இரண்டாயிரம் ஆண்டுகளாக நித்தம் தவம்புரிந்து, இருநூறு ஆண்டுகள் ஆங்கிலேய அடிமைத்தனமெனும் நரகத்தில் உழன்று, பாரத சமுதாயம் பெற்றெடுத்த பாரதியிடம் இச்சக்தி வெளிப்பட்டது, உண்மையிலே நமது சரித்திர விதியின் கூத்துத்தான்.

அந்தந்தக் காலத்திற்குரிய சமூகத் தேவைகளைச் சரித்திரம் உருவாக்குவதோடல்லாமல், அத்தேவைகளைக் காரிய சித்தியாக்கும் சக்திகளையும் சரித்திரம் படைக்கிறது—என்றான் மார்க்ஸ்.

பத்தொன்பதாம் நூற்றாண்டின் அஸ்தமன காலத்தில் பாரத சமுதாயத்தின் கர்ப்பத்தில் இரு சிசுக்கள் கருவுற்று வளர்ந்தன—ஒன்று, இந்திய தேசீய காங்கிரஸ் மகாசபை; இரண்டாவது,சுப்ரமண்யபாரதி. மார்க்ஸின் கூற்று மெய்யாயிற்று.

தேசீயம், மக்களாட்சி, பொதுவுடைமை — இவையடையாது குழல் முடியேன் என்று பாஞ்சாலி சபதம் செய்தாள்.

போர்ப்படையும், பாஞ்சஜன்ய

மும்—காங்கிரசும், பாரதியும்—ஒருங்கே களத்தில் தோன்றி காட்சியளித்தன.

இம்மாபாரதப் போர் வெற்றி காணும்வரையில், பாரதி என்னும் பாஞ்சஜன்யத்தின் சங்க நாதம் ஒலித்துக்கொண்டேயிருக்கும், படைதிரட்டிச் செலுத்தியவாறு இருக்கும்.

இந்தப் போர்ச் சகாப்தம் முழுவதின் கலாரூபமாக, இசைக் குயிலாக, போர்முரசாக, தரிசனம் தருகிறுன் பாரதி.

சரித்திரத்தின் சிசு சரித்திர கர்த்தா ஆகிவிட்டான்.

பாரதியின் சரித்திரம், சமுதாயத்தின் சரித்திரமாகியது.

இந்நிலையை எய்துவதற்குப் பாரதியிடம் இருந்த, முக்காலமும் உணர்ந்த சக்தியே, காரணம்.

முக்காலமும் உணர்ந்தோன் என்பதற்குப் பொருள் என்ன? பாரத நாட்டின் சென்ற காலப் பெருமை சிறுமைகள் அனைத்தையும் நன்குணர்ந்தவன்; நிகழ் காலத்தின் நிலை, நோக்கம், நடை, யாவற்றையும் கண்டு தேர்ந்தவன்; எதிர்காலத்தின் விதி, கதிகளைக் கூர்ந்தாராய்ந்து கணக்காகச் சொன்னவன்—என்பதே அச்சொற்றெடரின் பொருள்.

இத்தனிச் சிறப்பு பாரதிக்கு வாய்த்தமைக்குச் சரித்திரத் தேவை—புறநிலையின் நிர்ப்பந்தம்—இருந்தது என்பது உண்மை. ஆனல், அதைச் சொல்வதோடு நிறுத்திக் கொண்டால் உண்மை உண்மையாகிவிடாது. பாரதியின் அகநிலையும், மனப்பண்பும், கருத்து வளமும், நெஞ்சுத் துணிவும் தான் பிரதான காரணமாகும்.

கருத்து என்கிற குதிரையை, செயல் என்கிற தேரில் பூட்டி, சரித்திரம் என்கிற பாதையில் செலுத்திய சாரதியே, பாரதி. அவன், ஒரு கர்மவீரன்.

தமிழிலக்கியத்தில்- வாழ்வைப் பற்றி அழகுசொட்டக் கவிதை புனைந்தவர்களும் உண்டு; அழுது தீர்த்துச் சென்ற புலவர்களும் உண்டு.

நாட்டைப்பற்றி, பொருள் பொதிந்த பாக்களைக் கட்டியவர்களும் உண்டு; இருள்படர்ந்த பாக்களைக் கொட்டியவர்களும் உண்டு.

மானிட தெய்வத்தின் மீது அறம், பொருள், இன்பம் என்கிற முப்பாலையும் அபிஷேகம் செய்த பெரியோரும் உண்டு; மானிடனைப் பொய் என்று விரட்டி, வெள்ளெருக்கு பூக்க விட்டச் சிறியோரும் உண்டு.

இச்சிறியோரைச் சரித்திரம் சிரித்துச் சாகடித்துவிட்டது.

ஆனல், இப் பெரியோர்க்கெல்லாம் பெரியோனுக சரித்திரம் பாரதியைச் சிருஷ்டித்து விட்டது.

கர்மவீரனுக — வினைமுடிக்கும் வில்விஜயனுக — ஒரு புலவன் பாரத நாட்டில் தோன்றினுன். நிகழ்ச்சிகளை நேருக்குநேர்

வர்ணிக்கும் சஞ்சயன் மட்டு மல்ல அவன்.

வினைவகுக்கும் கண்ணனாக வும், வினைமுடிக்கும் விஜயனாக வும், வினைகுறிக்கும் சஞ்சயனாக வும்—ஒருங்கே காட்சியளிக் கிறான் பாரதி. அதனால்தான்—

"என்றும் ஓதுவதாய்—
"வினை மோதுவதாய்—
"தீமைகள் மாய்ப்பதுவாய்—
"துயர் தேய்ப்பதுவாய்—
"நலம் வாய்ப்பதுவாய்...

பாரதி இலக்கியம் பிரகாசிக் கின்றது.

மொழி இலக்கணம் புதுமை செய் என்று எச்சரித்துச் சென்றான் ஒரு தமிழன். புதியன புகுதலும், பழையன கழிதலும்......

"வேதம் புதுமை செய்" என்று ஒரு போடு போடுகிறான் நம் பாரதி—தனது புதிய ஆத்தி சூடியில்.

தேர் ஓடும் காலத்தில் தேருக்கு ஒரு குதிரை வேண்டும். தேர் ஓடும் காலம் போய், கார் ஓடும் காலம் வந்த பிறகு குதிரை வேண்டாம், மோட்டார் என்ஜின்தான் தேவை.

வேறு விசை வேண்டும். எனவே, வேதம் புதுமை செய்!

பழைய செயலுக்கு, பழைய நடைமுறைக்கு — பழைய கருத்து.

புதிய செயலுக்கு, புதிய நடை முறைக்கு—புதிய கருத்து.

இப்புதிய செயலுக்குப் பாரதி துணிந்ததால்தான், துடித்த தால்தான், புதிய புதிய உண்மைகளை, புதிய புதிய கருத் துக்களை, எட்டிப்பிடித்து அணைத்துக்கொண்டான்.

"கார்த்தடங்கண்ணி எந்தேவி—அவள்
கண்ணிலும் காண்டிவ வில்லினும்ஆணை;
போர்த்தொழில் விந்தைகள் காண்
பாய்—ஹேஹே!
பூதலமே! அந்தப்போதினில்'
என்றான்."

ஆம், போர்த் தொழிலில்—பாரதியின் கவிதைத் தொழி லில்—பூதலம் விந்தைகள் பல கண்டது. ஒரு புதிய ஒளி, புதிய வீச்சு, புதிய மூச்சு, தமிழுக்கும் தமிழனுக்கும் வாய்த்தது.

'முனையிலே முகத்து நில்' என்கிறான், கர்மவீரன் பாரதி. 'நுனியளவு செல்' என்று லட்சியசித்திக்கு ஊக்குவிக் கிறான். "புதுமை விரும்பு, நேர்படப் பேசு, வெடிப்புறப் பேசு" என்றெல்லாம் தைரிய மூட்டுகிறான். பாரதி இலக்கியம் முழுவதும் இந்தப் புதிய ஆத்தி சூடியின் காரியசித்தியாகும்.

இந்தக் கர்மவீரனின் பார்வை இருப்பதால்தான், பழமையை அணுகும் பாரதிக்கு மயக்கம் தயக்கம் எதுவும் ஏற்படுவ தில்லை.

பழமையை அணுகும் சிலருக்கு மயக்கம் ஏற்படுவதைப் பார்த்திருப்பீர்கள். அவர்கள் பழமையைப் போற்றுவதாகச் சொல்லி பழங்கதைகள் பேசு வார்கள், பிரத்யட்சவுலகை

மறந்து மயக்கம் போட்டு விழுவார்கள்.

இன்னொரு சாரார் புதுமையை நாடுவதாகச் சொல்லி, பழமையை அணுகவும் தயக்கம் கொள்வார்கள். அந்தப் பீடை நமக்கு எதற்கு—என்று சிணுங்கி ஒதுங்குவார்கள், புதுமையிலும் புதுமை தேடும் அவசரத்தில், ஆத்திரத்தில்.

இரு தவறுகளையும் தவிர்க்கிருன், பாரதி.

பாரதி பழமை என்கிற கடலில் மூழ்குகிருன், ஆனல் அதன் பாசியில் சிக்கிக் கொள்வதில்லை, முத்து எடுத்து மேலே வந்து விடுகிருன். மகா கெட்டிக்காரன், அல்லவா ?

ஒரு கர்மவீரன் மட்டும்தான்—சமுதாய வளர்ச்சியில் நாட்டம் கொண்டவன்தான் — பழமையின் பாசியை ஒதுக்கி, முத்துக் குவியலே மட்டும் தேடுவான். சமுதாய வளர்ச்சியில் கருத்துச் செலுத்தாதவர்கள் மட்டுமே பழமைக் குளத்தில் எருமை மாடுபோல் படுத்து, பாசியின் வாசனையை அனுபவித்துக் கொண்டிருப்பார்கள்.

பாரதி பழமையைப் போற்றுவது இந்தக் கண்ணேட்டத்தோடுதான். வெட்டி வேதாந்தியல்ல, காரியப்புலி அவன். நிகழ்காலச் செயலுக்கு எந்த அளவுக்கு உதவுகிறது, உதவவில்லை என்று பழமையை எடை போடும் தராசு அவன்.

ஆங்கில நாகரீகத்தின் மோகத்தை வெறுத்து, ஆங்கிலக் கல்வியை அருவருத்து,

" அன்ன யாவும் அறிந்திலர் பாரதத்
தாங்கி லம்பயில் பள்ளியும் போகுநர் :
முன்னர் நாடு திகழ்ந்த பெருமையும்
மூண்டி ருக்குமிந் நாளின் இகழ்ச்சியும்
பின்னர் நாடுறு பெற்றியுந் தேர்கிலார்
பேடிக் கல்வி பயின்றுழல் பித்தர்கள் ;'

என்று நிகழ்காலத்திய இகழ்ச்சி நிலையை அகழ்ந்து காட்டுகிருன். தீதியன்ற மயக்கம், ஐயம், செய்கை யாவினும் அசிரத்தை, வாது, பொய்மை—என்ற விலங்கினம் வாழும் வெங்குகையாக ஆங்கிலக் கல்வியை வர்ணிக்கிருன்.

" ஐய ரென்றும் துரையென்றும்
மற்றெனக்
காங்கி லக்கலை யென்றுரென் றுணர்த்திய
பொய்யருக்கிது கூறுவன்..."

என்று எச்சரிக்கின்ருன். கலாச்சாரத் துறையில் ஏகாதிபத்ய ஆட்சியும், அடிமைப் புத்தியும் வளர்த்த நாசக் கருத்துக்களையும், நீசப் பண்புகளையும் கண்டித்து,

" நலமொ ரெட்டுணை யுங்கண்டி
லேனிந்த
நாற்ப தாயிரங் கோயிலிற்
சொலலுவேன் "

என்று சீறுகிருன்.

பாரதியின் " சுயசரிதை " என்கிற கவிதை தமிழனின் சுயசரிதையாகி விடுகிறது. இக் கவிதையில்தான் பாரதி, போருக்குமுன் மயங்கித் தியங்கிக் குழம்பி நின்ற அர்ஜு-

னுகத் தன்னை வர்ணிக்கிருன்.

“ தந்தை போயினன், பாழ்மிடி சூழ்ந்தது;
தரணி மீதினில் அஞ்சலென் பாரிலர்;
சிந்தை யில் தெளி வில்லை; உடலினில்
திறனு மில்லை; உரனுரைத் தில்லையார்;
மந்தர் பாற்பொருள் போக்கி பயின்ற தாம்
மடமைக் கல்வியில் மண்ணும் பயனிலை
எந்த மார்க்கமும் தோற்றில தென் செய்கேன்?
ஏன்பி றந்தனன் இத்துயர் நாட்டிலே?

என் று நொந்துகொள்கிருன். இளங்கவியின் ஏமாற்றமும், வெறுப்பும் தமிழ் மக்களின், இந்திய மக்களின், ஏமாற்றமாகவும், வெறுப்பாகவும் தென்படுகிறது.

எனினும் இத்தனைத் துயர் மிகுந்த நிலையிலும், பாரதிக்கு ஆதாரமாக பிறகாலத்தில் நின்றது ஏது? “முன்னர் நாடு திகழ்ந்த பெருமை”தான். புதிய வாழ்வுக்குப் பழமையிலுள்ள பெருமைகளை ஊன்றுகோலாகக் கொள்கிருன். இச்“சுயசரிதை” யிலேதான், பழைமையின் மாட்சிமையை சில வரிகளில் வர்ணிக்கிருன்.

“ கம்ப னென்றொரு மானிடன் வாழ்ந்ததும்,”

என்று துவக்குகிருன். காலக் கோவிலின் ஆயிரக்கால் மண்டபத்தில், மார்கழி இரவில் கேட்ட மத்தளத்தின் இடிமுழக்கமும், நாதசுவரத்தின் கானவெள்ளமும் போல், கம்பீரமான, புளகிதமானதொரு சொற் சித்திரம் தீட்டிவிடுகிருன். பாரதியின் தாண்டவக் கூத்து இவ்வரிகள்

“ கம்ப னென்றொரு மானடன் வாழ்ந்ததும்,
காளி தாசன் கவிதைபு னைந்ததும்,
உம்பர் வானத்துக் கோளையும் மீனையும்,
ஓர்ந்த ளந்ததோர் பாஸ்கரன் மாட்சியும்,
நம்ப ருந்திற லோடொரு பாணினி
ஞால மீதில் இலக்கணங் கண்டதும்,
இம்பர் வாழ்வின் இறுதிகண் டுண்மையின்
இயல்பு ணர்த்திய சங்கரன் ஏற்றமும்,
சேரன் தம்பி சிலம்பை இசைத்ததும்,
தெய்வ வள்ளுவன் வான்மறை செய்ததும்,
பாரில் நல்லிசைப் பாண்டிய சோழர்கள்
பார ளித்ததும், தர்மம் வளர்த்ததும்,
பேரருட்சுடர் வாள்கொண்ட சோகனூர்
பிழைபடாது புவித்தலங் காத்ததும்,
வீரர் வாழ்த்த மிலேச்சர்தந் தீயகோல்
வீழ்த்தி வென்ற சீவாஜியின் வெற்றியும்”,

—அன்னயாவும் உயிர்பெற்றெழுந்து தமிழனைச் செயலுக்குத் தூண்டுகின்றன. இப்படியே கணக்கற்ற கவிதைகளில் பண்டைப் பெருமைகளை வியந்தோதுகிருன்.

இந்தியாவின் சமுதாய கலாச்சார ஒற்றுமைகளையும், மாண்புகளையும், சாதனைகளையும் சாறு பிழிந்து தந்துவிடுகிருன்.

கம்பனென்னும் திருப்பாற் கடலில் மூழ்கித் திளைக்கின்ற பாரதி, காளிதாசன் என்னும் இமயத்தின் முடியையும் தொட்டுச் செல்கிருன். பாணினியின்

பெருமையைப் பாடும் பாரதி,

" பொதியமலைப் பிறந்தமொழி வாழ்
வறியும்
காலமெலாம் புலவோர் வாயில்
துதியறிவாய், அவர்நெஞ்சின் வாழ்த்
தறிவாய்,
இறப்பின்றித் துலங்கு வாயே"

என்று இறவா வரம் பெற்றுவிடுகின்றான்.

தமிழ்ப்பற்று மிக்க பாரதி, வடமொழியைப் பெருமைப்படுத்துவதில் வியப்பில்லை. இந்தியக் கலாச்சாரத்தின் உன்னதப் பிரதிநிதி அவன்.

பழைமையை நிகழ்காலப் பிரச்னைக்கு உபயோகித்துக் கொள்ள விரும்பும் பாரதி, இது போலவே பாரத நாட்டின் பல்வேறு இனங்களின் தனித்தனி சிறப்புக்களையும், எல்லாவற்றிற்கும் பொதுவான பொக்கிஷங்களையும் பல பாடல்களில் பரிபாலிக்கின்றான்.

வேத காலத்தில் பெண்கள் வகித்த சம அந்தஸ்தை பாஞ்சாலி சபதத்தில் நினைவூட்டி,

"............கோமகனே, பண்டையுக
வேத முனிவர் விதிப்படி, நீ சொல்வது
நீதமெனக் கூடும்; நெடுங்காலச்
செய்தியது!
ஆணொடுபெண் முற்றும் நிகரெனவே
அந்நாளில்
பேணிவந்தார். பின்னாளில் இஃது
பெயர்ந்துபோய்
இப்பொழுதை நூல்களினை யெண்ணுங்
கால், ஆடவருக்
கொப்பில்லை மாதர்......"

என்று இடைக்காலத்தில் மாதர்க்கு நேர்ந்த அவக்கேட்டையும் குறிக்கிறான். 'தையலை உயர்வு செய்' என்று புதிய ஆத்திசூடியில் பணிக்கின்றான். பெண் விடுதலைக் கும்மி, புதுமைப் பெண் முதலான பாடல்கள், வேத காலத்திய பண்பை நிகழ்கால உரிமைப் போருக்கும், எதிர்கால நடைமுறைக்கும் உபயோகித்துக் கொண்டு நம்மை ஊக்குவிக்கிறான்.

அத்தின புரத்தின் பெருமை சிறுமைகளைப் பாஞ்சாலி சபதத்தில் இவ்வாறு வர்ணிக்கிறான்.

" மெய்த்தவர் பலருண்டாம்; வெறும்
வேடங்கள் பூண்டவர் பலருமுண்டாம்;
உய்த்திடு சிவஞா னம்—கனிந்
தோர்ந்திடு மேலவர் பலருண்டாம்,
பொய்த்த விந்திரசா லம்—நிகர்
பூசையும் கிரியையும் புலைநடை யும்
கைத்திடு பொய்ம்மொழியும்—கொண்டு
கண்மயக் காற்பிழைப் போர்பல ராம்"

மேலவர், கீழவர் எனப்பிரித்துக் காட்டுகிறான். நிகழ்கால இந்தியாவுக்கு வந்தால், சமுதாயத்தைப் புட்டுப்புட்டுக் காட்டிவிடுகின்றான், பல கவிதைகளில். நிகழ்காலச் சிறுமைகளின் இச்சித்திரத்தின் முடிவே "பாரத சமுதாயம்" என்கிற பாடல். இறந்தகால, நிகழ்கால, வருங்காலச் சமுதாயங்களை வெளிப்படையாக வர்ணித்து விடுகிறான்.

இப்படி முக்காலமுமுணர்ந்த ஞானத்தைப் பல துறைகளில் பாரதி பெற்றிருந்தான். அத

ஞல்தான் அவன் கவிதை, கவிதையாக மட்டும் இருந்துவிடாமல், ஒரு வேலைத்திட்டம்போல், புலப்படுகிறது. தெருவில் மக்கள் ஊர்வலம் எழுப்பும் கோஷங்கள் அப்படியே பெயர்ந்தெழுந்து வந்து அவன் கவிதைகளில் அரசன் அமர்வதுபோல அமர்ந்துவிடுகின்றன.

இத்தகைய சக்தி வேறெந்த இந்தியப் புலவனுக்கும் பாரதி காலத்தில் இருக்கவேயில்லை.

தான் வாழ்ந்த சகாப்தத்தின் மகிமையை இத்தனை தெளிவாகவும், விரிவாகவும், ஆழமாகவும், கண்ட புலவன் பாரதி காலத்தில் வேறுயாருமில்லை.

தமிழ் நாடும், தமிழனும்தான் இந்தியாவில் முதன்முதலில் ஆங்கிலேயனுக்கு அடிமைப்பட்டார்கள். அச்சிறுமையைப் போக்குவதற்கும், தாய்த் திருநாட்டை மீட்டுக்கொள்வதற்கும் முதல் முதலில் முயற்சித்தவனும் தமிழனே. வீரபாண்டி கட்டபொம்மு, முதல் விடுதலைப்போர் வீரனானன். சுப்ரமண்ய பாரதி முதல் விடுதலைக் கவியானான்.

பழி அகன்றது; போர் தொடர்ந்தது; வெற்றி வந்தடைந்தது.

இன்னும் எத்தனையோ வெற்றிகள் கிடைக்க வேண்டியுள்ளது. பாரதியின் "புதிய கோணங்கி"க்குத்தான் எத்தனை ஆசை!

" நல்லகாலம் வருகுது, நல்லகாலம்
வருகுது;
சாதிகள் சேருது, சண்டைகள்
தொலையுது;
தரித்திரம்போகுது, செல்வம்வருகுது;
தொழில்பெருகுது, தொழிலாளி வாழ்
வான்;
சாத்திரம் வளருது, சூத்திரம் தெரியுது;
சாமிமார்க்கெல்லாம் தைரியம் வளருது;
தொப்பை சுருங்குது; சுறுசுறுப்பு
விளையுது;
நேத்திரம் திறக்குது; நியாயம்
தெரியுது;
பழைய பைத்தியம் படீலென்று
தெளியுது;
வீரம் வருகுது, மேன்மை கிடைக்குது "

இது கனவா, கவிதையா, வேலைத்திட்டமா? இதுதான் பாரதி!

குட்டிக்கதைகள்

அவரவர் விருப்பம்

ஒரு கழுதை பெரிய மூட்டையைச் சுமந்துகொண்டு நடந்தது. அந்த மூட்டையில் பலவிதமான ருசியான தின்பண்டங்கள் இருந்தன. கழுதையின் வழியில் சப்பாத்திக் கள்ளிகள் புதர் புதராக வளர்ந்து இருந்தன. சப்பாத்திக் கள்ளிகளைக் காணக் காண கழுதை குஷியடைந்தது. ஆவலோடு சப்பாத்திக் கள்ளிகளை ருசி பார்த்தது.

"என் முதுகில் அறுசுவை உண்டி இருக்கிறது. எல்லோரும் அதைப் பிரியத்தோடு உண்பார்கள். ஆனால் எனக்கோ அதைவிட இந்த முள் செடிதான் பரம ஆனந்தமாய் இருக்கிறது!" என்று கழுதை சொல்லிக் கொண்டது.

* * *

முட்டாள் கழுதை

வியாபாரி ஒருவனிடம் கழுதை இருந்தது. சந்தையில் சாமான்கள் வாங்கி கழுதை மேல் ஏற்றி வருவது அவன் வழக்கம். ஒரு நாள் உப்பு மூட்டை வாங்கிக் கழுதையின் மீது ஏற்றிக் கொண்டு வந்தான். வழியில் ஒரு ஓடையைக் கடக்க வேண்டும். ஓடையில் இறங்கி வந்த போது கால் தவறி கழுதை தண்ணீரில் விழுந்து விட்டது. அதன் முதுகில் இருந்த உப்பு மூட்டை தண்ணீரில் நனைந்தது. அதனால் உப்பு தண்ணீரில் கரைந்து போயிற்று. கழுதை மீண்டும் எழுந்தபோது பாரம் ரொம்பக் குறைந்துவிட்டதைக் கண்டு கழுதை மகிழ்ச்சியடைந்தது. இன்னொரு தடவை அந்த வியாபாரி சந்தையில் துணி வாங்கினான், அதை மூட்டை கட்டிக் கழுதைமேல் ஏற்றி வந்தான் பழைய ஓடை வந்தது. ஓடையைப் பார்த்ததும் கழுதைக்குப் பழைய ஞாபகம் வந்தது. தண்ணீரில் நனைந்தால் பாரம் குறையும் என நினைத்தது. அதனால் தவறி விழுவதாய்ப் பாவனை செய்தது. தண்ணீருக்குள் விழுந்தது. துணி தண்ணீரில் நனைந்ததும் பாரம் அதிகம் ஆயிற்று. கழுதை தண்ணீரை விட்டு எழுந்ததும், பாவம், பாரம் சுமக்க முடியாமல் வளர்ந்ததை உணர்ந்தது. என்ன செய்வது? ஏமாற்றத்தோடு சுமக்க முடியாமல் சுமந்து வந்தது. —ஈசாப்.

தேயிலைத் தோட்டத்திலே...

"அருட் கவிராயர்"

1. தேயிலைச் செடியை வளர்ப்போன்

(நிலைமண்டில ஆசிரியப்பா)

மலர்த்தளி ரிலையால் மாநில மனிதர்
பலர்புகழ் பெருந்திருப் பலனடைந் துயர்ந்த
தேயிலைச் செடியே! தேயிலைச் செடியே!!
நீயிலை யெனிலுனை வளர்ப்பவர் நிலைமை
எவருள படியினி எடுத்துரைத் திடுவார்?
தவறிலா ததனல் தாரணி யறிய
எடுத்துரை பகருயர் எழில்தே யிலையே!
"தொடுத்தெனை வளர்ப்பவர் துரையென் போர்சிலர்;
*கண்டாக் கெனுமதி காரியென் போர்பலர்;
கண்டார் கண்டவா றுரைப்பினு மெனது
மெய்க்கண் கண்ட மெய்ம்மை தன்னை
பொய்க்கண முரைக்கும் பொய்மை போக்கியும்
கடுத்தவர் கடுமொழி கடிந்தும் கேட்பின்,
அடுத்துவந் தெனைப்பேர் அன்புடன் வளர்ப்பவன்
தொழிலினை யாளும் தேயிலைத் தோட்டத்
தொழிலா ளியெனச் சொல்லுவன் ஐயா.
அந்தமில் அவனது துயருறு நிலையைச்
சிந்தனை செயின்நீர் சிந்துங் கண்ணே!"

2. அதிகாரிகள்

(நேரிசை ஆசிரியப்பா)

"ஒருபணி விடையாள் ஒரிரு தலைவருக்
கரும்பணி புரிதல் அரிதெனல்" கிறிஸ்தின்

---

*கண்டாக்கு: கண்டக்டர் அல்லது எஸ்டேட் ரைட்டர். இவர்கள்தான் தேயிலைத் தோட்ட நிர்வாகத்தில் வெள்ளைத் துரைக்கு அடுத்த ஸ்தானத்தில் இருக்கின்ற இந்தியர்கள்.

எழில்மொழி யெனிலிவர்க் கெசமான் எண்ணிலர் !
பழிபவ மறியா பாமரத் தொழிலாள்.
புலியெனப் பாயும் பெருந்துரை; அவனது
ஒலியெழக் குரைக்கும் நாயினை நிகர்க்கும்
சிறுதுரை; அவன்கீழ் சீரினை யிழந்தோர்,
வறுமை யுற்றோர், வாழ்வகை யறியார்,
பள்ளிப் படிப்பைப் பாதியில் முற்றுப்
புள்ளி வைத்தோர் பெற்றவர்க் கடங்கார்,
குருவை எதிர்த்தவர், குலத்துக் காகார்,
திருட்டுகள் புரிந்தோர் பலரும் தேயிலைத்
தோட்டம் புகுந்து, தொழிலுக் கலைந்து
காட்டிடை திரியும் காளை போன்றொரு
கண்டாக் கெனுங்காட் டையா; கால
கண்டனை நிகர்த்திடுங் கணக்குப் பிள்ளை;
தேயிலை ஆலையில் சோம்பி யிருந்து
வாயிலை நோக்கிடு பெரியடீ *மேக்கர்;
அவரது முடிவுக் காவன சூழ்ந்து
சிவன்செயல் காத்திடும் சிறுடீ மேக்கர்;
மாதரைக் கொழுந்துடன் வரவெதிர் பார்த்து
மாதரை நோக்கும் †மெத்தைக் கணக்கன்;
ரோந்து பார்க்கும் ‡ரோதைக் கணக்கன்;
சாந்துசவ் வாதுடன் தனியா சனத்தில்
முத்தொழில் முதல்வன் எனவிறு மாந்தெழுத்

---

*பெரிய டீ மேக்கர்: தேயிலை ஆலையில் தேயிலையைப் பாகம் செய்யும் உயர்அதிகாரி. எஸ்டேட் துரைக்கு அடுத்தபடி தேயிலையில் பெரிய அதிகாரி இவர்தான்.

†மெத்தைக் கணக்கன்: டீ மேக்கருக்குக் கீழ் வேலை செய்பவர். பெண்கள் கொண்டுவரும் கொழுந்தை நிறுப்பது இவர் தொழில்.

‡ரோதைக் கணக்கன்: டீ மேக்கருக்குக் கீழ் வேலை செய்பவர். தேயிலை ஆலையில் தேயிலை அறைபடும் யந்திரங்களில் வேலை செய்யும் தொழிலாளர்களுக்கு அதிகாரி.

துத்தொழில் பெரிய *ஆபீஸ் ரைட்டர்;
நாடி பார்த்தவர் நாளையும் பார்த்துக்
கூடிச் சதிசெயுங் குட்டிக் கிளார்க்குகள்;
கோட்டான், சூட்டாள், நாட்டான், கம்பிளி
போட்டாள், தேட்டாள், பாட்டாள், பழகிய
வீட்டாள், தன்னை வேட்டாள், மாட்டாள்,
கூட்டாள் எனமன வேற்றுமை காட்டிகண்
ணோட்ட மின்றிவிண் ணூட்டுக் கேகிட
சீட்டுக் கொடுத்திடும் பெரிய டாக்டர்;
கொடுநோ யெதற்கும் கொயினா கலக்கிக்
கொடுத்துத் தொழிலாளர் குடியைக் கெடுக்கும்
அரைவைத் தியனும் †அப்பா திக்கிரி;
நரைதிரை படரா நகைமுகம் காட்டி
மேனி மினுக்கி மெல்லுடை யணிந்து
கூனி நடந்து குறுவிழி விழித்து
பட்டப் பகலில் பாட்டாள் எல்லுடல்
தொட்டிடக் கூசிடும் தோகை நர்சுகள்;
விரும்பவும் வெறுக்கவும் படாதா ராகி
கரும்பினு மினித்திடுங் கனிமொழிச் சிறுவரை
தன்மகன் ஆபீஸ் ஐயா மகனே
பொன்பொரு ளில்லாப் பாட்டாள் மகனே
பொருள்நனி தருபிறர் மகனெனப் பலவகை
அருளிலாப் பிரிவுகள் அமைத்துபின் னவர்க்குக்
கற்றுக் கொடுக்குமோர் உபாத்தி யாயர்;
முற்றிலும் இரங்கா முதலா ளியையும்
தொழிலா ளியையும் சுரண்டித் தின்று,
அழியும் வாழ்க்கை ஆண்பாட் டாளியைப்
பெண்பாட் டாளியைப் பிழைபடப் பேசி,
கண்கா ணித்திடு கங்கா ணியின்ன
வேலையிற் சேர்ந்து வேதனைப் படுத்தும்

---

*ஆபீஸ் ரைட்டர்: எஸ்டேட் ஆபீசுக்கு அதிபதி.

†அப்பாத் திக்கிரி: டாக்டருக்குக் கீழ் வேலை செய்யும் அரை வைத்தியர்.

இவரெல் லார்க்கும் இன்பமாய் நடந்து
அவரிடு பணிபல அன்புடன் புரிந்திடல்
எளிதோ ? ஐயா ! இவரிடை ஏழைத்
தொழிலாள் படுபெருந் தொல்லை, போட்டி
ஆட்டக் காலடிப் பந்தோ! அடுபுலிக்
கூட்டத் தகப்படு மாடோ ! காட்டுக்
குரங்குகைப் படுமலர்ச் சரமோ ! என்னென
இரங்குவன் ! ஏழையர் விடுதலை
இலையோ ஐயா ! இந்நில உலகே.

(தொடரும்)

ச ர ஸ் வ தி

விளம்பர விகிதங்கள்

முழுப் பக்கம்	....	ரூ. 40
அரைப் பக்கம்	....	ரூ. 20
அட்டை வெளிப்புறம்	....	ரூ. 60
அட்டை உட்புறம்	....	ரூ. 50

நீடித்த விளம்பரங்களுக்குக் குறைந்த விகிதங்கள்

விவரங்களுக்கு:

சரஸ்வதி

19, லேங்க்ஸ் கார்டன் ரோடு,
மவுண்ட் ரோடு — சென்னை-2

விஞ்ஞான உலகம்

வியாழன்

அ. நடராஜன்

"வாசவனுர் போற்று குரு
வாக்குக் கொரு தலைவன்
தேசுறு பொன் போன்ற
திருமெய்யான்—மாசில் அக்க
மாலை தண்டம் குண்டிகைசின்
முத்திரை கைவைத்த குண
சீலன் வியாழன் என்றுதேர்"

சூரியனைச் சுற்றிப் புதன், வெள்ளி, பூமி, செவ்வாய், சிறுகோளத்திரள்கள், வியாழன், சனி, யுரேனஸ், நெப்ட்யூன், ப்ளூடோ என்னும் கோள்கள் இயங்கி வருகின்றன. அக் கோள்களில் ஒன்ருகிய வியாழனைப் பற்றிய சில விவரங்களை இக்கட்டுரையில் காணலாம். வியாழனுக்குக் குரு, பிருஹஸ்பதி என்னும் பெயர்களும் உண்டு. கல்யாணம் நடப்பதற்குக் 'குரு பார்வை' அல்லது 'வியாழ நோக்கு' வரவேண்டும் என்ருெரு நம்பிக்கை இருந்து வருவது எல்லோருக்கும் தெரியும்!

சூரியனைச் சுற்றிவரும் கோள்களில் அளவிலும் எடையிலும் அதுதான் மிகப் பெரியதாகும். சூரியனுக்கும் வியாழனுக்கும் இடையில் உள்ள தொலைவு 46 கோடி மைலிலிருந்து 50·6 கோடி மைல்வரை மாறுகின்றது; சூரியனைச் சுற்றி வியாழன் இயங்கி வரும் பாதை ஒரு நீண்ட வட்ட வடிவத்தில் இருப்பது தான் அதற்குக் காரணம் ஆகும். வியாழன் சூரியனைச் சுற்றிவர எடுத்துக்கொள்ளும்காலம்சுமார் 12 ஆண்டுகள். தன்னைத்தானே சுற்றிக்கொள்ள அதற்கு ஏறக் குறைய பத்து மணி நேரமே ஆகின்றது. அவ்வளவு விரைவாக அது சுழலுவதால் துருவப் பகுதிகளில்அது மிகவும் தட்டையாக அமுங்கித் தோன்றுகிறது. ஒரு சிறிய தொலை நோக்கி வழியாகப் பார்த்தால்கூட அந்த விவரம் எளிதில் புலனுகும். குறுக்களவு (விட்டம்) நடுப்பகுதியில் 88,700 மைல்; துருவங்களுக்கிடையில் 83,000 மைல் ஆகும். வியாழனின் கன பரிமாணம் நம் பூமியினுடையதைப் போன்று 1300 மடங்கேயாம்; எனினும், அதன் எடை என்னவோ பூமியினுடையதைப் போன்று 317 மடங்கே! இதற்குக் காரணம் வியாழனுடைய சராசரி இறுக்கம் நீரைப் போன்று 1·34 மடங்குள்ளதாக இருப்பதுதான். 'ஆளைப் பார்த்து மயங்காதே ஊது காமாலை' என்னும் பேச்சுப் போல்தான் வியாழனுடைய அமைப்பும் இருக்கிறது.

கிரகங்கள் எவ்வாறு உண்டாயிருக்கக் கூடும் என்பதை

ஆராய்ந்த அறிஞர்கள் வேருெரு நட்சத்திரத்திஞல் தாக்கப்பட்ட தஞலோ, தாஞகவோ அல்லது மிகப் பெரிய ஒரு விண்மீன் அருகாமையில் வந்ததஞல் ஏற் பட்டஅலேகளின் விளேவாகவோ, அல்லது சூரியனின் துணே விண் மீன் சிதறுண்டதஞலோ கோள் கள் உண்டாயின என்றும் வெப்ப நிலே குறைந்தவுடன் அவை இறுகின என்றும் கூறியுள்ள னர். வியாழனும் முதன் முதலில் மிகுந்த வெப்பநிலேயில்தான் இருந்தது; காலம் செல்லச் செல் ல, சிறிது சிறிதாகக் குளிர்ந்து இறுகியது. வியாழனுடைய நடுப் பகுதியில் சுமார் பாதி தூரம் வரை பாறையும் அதைச் சுற்றிப் பல நூறு மைல்கள் வரை பனிக் கட்டியும் இருப்பதாகச் சொல் லப்படுகின்றது. முதலில் இருந்த பிராணவாயு, நீர் வாயு (ஹைட்ரஜன்)வுடன் கலந்து நீராக மாறிக் குளிர்ந்து பனிக் கட்டியாக மாறிவிட்டது. வியாழ னின் காற்றுமண்டலத்தை எடுத் துக் கொண்டால் அதன் அடிப் பகுதியில் 'ஹைட்ரஜன்' வாயு வும் மேற்பகுதியில் 'அமோ னியா', 'மீதேன்' என்னும் வாயுக்களும் உள்ளன என்று ஆராய்ச்சிகள் மூலம் தெரிய வந்துள்ளது. கோள், சூரியனிட மிருந்து பிரிந்தபோது அதில் இருந்த 'கரி' ஹைட்ரஜனுடன் கலந்து 'மீதேன்' வாயுவும், நைட்ரஜன் ஹைட்ரஜனுடன் கலந்து 'அமோனியா' வாயுவும் உண்டாயிருக்கக்கூடும். வியாழ னின் கவர்ச்சி ஆற்றல் அதிக மாக இருப்பதால் மிகவும் லேசான ஹைட்ரஜன் வாயு வைக்கூட அது வெளியேவிட்டு விடாமல் இழுத்து வைத்துக் கொள்கிறது. உள் வெப்பம் எதுவும் வியாழனுக்கு இல்லே என்றே விஞ்ஞானிகள் கருது கின்றனர். காற்று மண்டலத் தின் வெப்பநிலே, நீர் பனிக்கட்டி யாக மாறும் நிலேக்குக் கீழே 130 டிகிரீ குறைவாக இருக்கிறது.

வியாழனின் காற்றுமண்டலத் தைத் தொலே நோக்கியின் வாயி லாகக் கவனித்துப் பல ரசமான விவரங்களே அறிஞர்கள் தெரி வித்துள்ளனர். நமக்குத் தெரி வது காற்று மண்டலம் மட்டுமே. அதை ஊடுருவி உள்ளே எதை யும் பார்க்க முடிவதில்லே. வியாழ னின் நடுப்பகுதியில் மஞ்சள் நிறத்தில் பட்டை போன்று ஒரு பரப்புத் தென்படுகிறது. அதற்கு மேற்புறமும் கீழ்ப்பகுதியிலும் மத்திய ரேகைக்கு இணேகோடு கள் போன்று பட்டையான பரப் புகள் பல மாறி மாறி ஒளி மிகுந் தும் கறுப்பாகவும் இருக்கின் றன. இந்தப் பரப்புக்களின் உருவம் அடிக்கடி மாறுவதைக் கவனித்து, விரைவாகச் சுழன்று வரும் வியாழனின் காற்று மண்ட லத்தில் ஏற்படும் காற்ருேட்டங் கள்தாம் அவை என்று விஞ் ஞானிகள் நினேக்கின்றனர். ஒழுங்கான இப்பட்டைகள் அன்றி, ஒழுங்கில்லாமலும் சில கோடுகள் காணப்படுகின்றன. காற்று மண்டலத்தின் அடிப் பகுதியில் ஓயாது நிகழும் குழப் பத்தையும் மாறுபாடுகளேயுமே

அவை குறிக்கின்றன என்று கருதப்படுகின்றது. ஒரு பகுதி மாத்திரம் பல ஆண்டுகளாக மாருது இருந்துவந்தது. அதற்குச் 'சிகப்புப் பகுதி' என்று பெயர். முதன்முதலாக அது 1870 ஆம் ஆண்டில் அறிவிக்கப்பட்டது. மத்திய ரேகைக்கு அருகில் தென்புறத்தில் அது கண்டு பிடிக்கப்பட்டது. நீண்ட வட்ட வடிவத்தில் காணப்பட்ட அது முதலில் வெளுத்த ஊதா நிறத்துடன் இருந்தது; பின்னர் அளவில் பெரியதாகிச் செந் நிறத்துடன் திகழ்ந்தது. 1919ம் ஆண்டுவரை அது முக்கியமான விவரமாகவே இருந்துவந்தது. இப்போது அது மிகவும் மங்கி விட்டது. வியாழனின் மேற்பரப்பில் காணப்படும் இந்த விவரங்களைக் குறித்து வானவியல் அறிஞர் பலர், தங்கள் வாழ்நாள் முழுவதும் ஆராய்ச்சிகள் செய்துள்ளனர். எனினும், அவற்றைப் பற்றிய திட்டமான செய்தி எதுவும் கிடைத்ததாகத் தெரியவில்லை.

சந்திரன் பூமியின் ஒரே துணைக்கோள்; ஆனால், பதினொன்று துணைக் கோள்கள் வியாழனைச் சுற்றி வருகின்றன. அவற்றில் நான்கை முதன் முதலில் (1610ல்) கண்டு பிடித்தவர் விஞ்ஞான வழிகாட்டிகளுள் மிகச் சிறந்து விளங்கும் காலிலேயோ ஆவர். ஐந்தாவது 1892ல் கண்டு பிடிக்கப்பட்டது. மீதி ஆறும் ஃபோட்டாக காமிராவைப் பயன்படுத்திக் கண்டு பிடிக்கப்பட்டன. பத்தாவது, பதினொன்ருவது துணைக் கோள்களைக் கண்டுபிடித்த நிக்கல்ஸன் "பத்தாவது துணைக்கோளின் ஒளி 3,000 மைல் தொலைவில் உள்ள மெழுகு திரியின் வெளிச்சத்தைவிட அதிகமாக இல்லை" என்று கூறுகிருர்.

வியாழனின் துணைக் கோள்கள் பெரும் ஒழுங்குடன் இயங்கி வருகின்றன. குறிப்பிட்ட ஒரு நேரத்தில் அவை எங்கே இருக்கும் என்பதைத் திட்டமாகக் கணக்கிட்டுக் கூறிவிடலாம். தவிரவும், சூரிய சந்திர கிரகணங்களை முன்கூட்டியே அறிந்து கொள்வதுபோல் அத்துணைக் கோள்களின் கிரகணங்கள் நிகழும் நேரத்தையும் நாம் முன்னதாகவே தெரிந்துகொள்ளலாம். இக் கிரகணங்கள் அடிக்கடி நிகழ்கின்றன; ஒரு சிறிய தொலை நோக்கி மூலமாகக் கூட அவற்றை நாம் பார்க்க முடியும்.

1685 ஆம் ஆண்டில் டென்மார்க்கைச் சேர்ந்த ரோமர் என்னும் வானவியல் அறிஞர் இந்தக் கிரகணங்களைக் கவனித்து 'ஒளியின் வேகம்' நிலையான அளவுள்ளது என்பதை எடுத்துக் காட்டினுர். அவர் காலத்திற்கு முன்னர் ஒளியின் வேகம் அளவிட முடியாதது என்று கருதப்பட்டு வந்தது. (மின்னலும் இடியும் ஒரே சமயத்தில் தோன்றினுலும் மின்னலை உடனே பார்த்துவிடுகிருேம். இடியின் ஒலியைச் சிறிதுநேரம் சென்ற பிறகே கேட்கிருேம் அல்லவா? இதற்குக் காரணம் ஒளியின் வேகம் ஒலியின் வேகத்தைவிட

மிகமிக அதிகமாக இருப்பது தான்; ஒளி ஒரு விநாடியில் 1,86,000 மைல் தொலைவு செல்கின்றது!) வியாழனின் துணைக் கோள்களின் கிரகணங்கள் அறிவிக்கப்பட்ட நேரத்திற்கும் அவை நிகழுவதைக் காணும் நேரத்திற்கும் சிறு வேறுபாடு இருப்பது கவனிக்கப்பட்டுவந்திருக்கின்றது. ஆனால், அதற்குத் தக்க விளக்கம் யாரும் தரவில்லை. சூரியனுடைய ஒளி, வியாழன் மீது விழுவதால் வியாழனுக்கு அப்பால் நிழல் உண்டாகிறது. அந்த நிழலுக்குள் வியாழனின் துணைக்கோள் செல்லும்போது அதற்குக் கிரகணம் ஏற்படுகின்றது. பூமி, சூரியனைச் சுற்றி வருவதால் ஒரு சமயம் வியாழனுக்கு மிக அருகிலும் ஆறு மாதம் கழித்து மிகத் தொலைவிலும் அது இருக்கும். ஆதலால், மிகத் தொலைவில் இருக்கும்போது ஒளி எடுத்துக் கொள்ளும் நேரம் மிக அருகில் இருக்கும்போது எடுத்துக்கொள்ளும் நேரத்தைவிட அதிகமாக இருக்கும் என்பதை ரோமர் எடுத்துக் காட்டினார்; ஒளியின் வேகத்தை அளப்பதற்கு ஒரு வழியும் அப்போதுதான் கண்டுபிடிக்கப்பட்டது.

துணைக் கோள்களில் எட்டு வியாழன்சுற்றும் திசையிலேயே இயங்குகின்றன; மூன்றுமட்டும் எதிர்த் திசையில் சுற்றி வருகின்றன.

சரஸ்வதி

ஒவ்வொரு ஆங்கில மாதமும்
முதல் தேதியன்று வெளிவருகிறது

சந்தா விவரம்

தனிப்பிரதி	2 அணா
ஆண்டு சந்தா	ரூ. 1-8-0.

தனிப்பிரதி வேண்டுவோர் மூன்றணா ஸ்டாம்பு அனுப்பிவைக்கவும்.

நிர்வாகி

சரஸ்வதி

19, லேங்ஸ் கார்டன் ரோடு,
மவுண்ட் ரோடு :: சென்னை-2.

நந்த காவியம்

டி. செல்வராஜ்

பதிப்பாசிரியர் குறிப்பு

[அதாவது 1953-ம் வருஷம் தியதி தெரியவில்லை அரசாங்கத் துப்பறியும் இலாகாவைச் சேர்ந்த நானும் எனது நண்பனும் 1953-ம் வருஷம்... மாதம்...ம் தேதி சிறுமலை எஸ்டேட்டில் நடைபெற்ற துப்பாக்கிப் பிரயோகம் சம்மந்தமாய் தஸ்தாவேஜுக்களைத் தேடிக் கொண்டிருந்த சமயம் ஏக தேசம் இரத்தக் கறையும், புகையிரையும் படிந்திருந்த மேல்ப்படி கைப்பிரதி கிடைக்கப் பெற்றது. இடை இடையே பலதாள்கள் காணமல் போனதால் பல படலங்களே காணமல் போயிருக்க வேண்டும். கவிஞரின் ஊர் பேர் தெரியவில்லையாயினும் பூர்வ கோத்திரத்தை விசாரித்ததில் திருநெல்வேலி ஜில்லாவில் எட்டையபுரம் சமஸ்தானத்தில் கவிஞராகப் பணியாற்றிவிட்டுத் தனது திறமையை இழந்து கடைசியில் கூலியாக எஸ்டேட்டிற்கு ஜீவனம் செய்ய வந்தவரென்று தெரிகிறது.]

* * *

அவையடக்கம்

தொல்காப்பியம் முதல் பல் காப்பியமும் கற்றுத் தேர்ந்து கல்வி கேள்விகளில் வல்லோராகிய பெரியோர்கள் எதுகை மோனை, எமகண்ட இந்திர ஜாலம் செய்யும் திறமையை இழந்துவிட்டதால், அரசர்களையும் ஆண்டவனையும் பாடிய வாயால்வானத்தை வில்லாகவும் மணலைக் கயிருகவும், அங்கையில் வைகுந்தம் காட்டவுமான எமகிங்கர அவதாரமாகப் பிறக்காமல் பல் நூற் கேள்வியும், சாஸ்திர ஞானமுமற்ற ஏழையினும் ஏழையான, காடு கொன்று நாடாக்கியும், அயராது அல்லும் பகலும் பாடுபட்டும் வாழ்வுக்கும் வகையற்று ஆழாக்குக் கஞ்சிக்காய் அல்லாடித் திரிந்து, துப்பாக்கியஸ்திரத்திற்கு இலக்காகி துருவ பதவி எய்திய பஞ்சமன் ஒருவனின் கதையைப் பாடலுற்றேன். இந்நூலில் சொற்குற்றம் பொருட் குற்றம் எக்குற்றமிருப்யினும் அகழ்வாரைத் தாங்கும் நிலம் போன்று குற்றம் களைந்து காவியத்தின் பொருள் தேர்ந்து போற்றுமாறு வேண்டுகிறேன்.

* * *

குலமுறை கிளத்துப் படலம்

அகத்திய மாமுனிவனிருந்து அருந்தமிழாய்ந்த பொதிகையின் உந்திக்கமலத்து உதித்

தெழுந்து திருநெல்வேலிச் சீமையான தென் பாண்டி நாட்டை வளப்படுத்துகின்ற பொருணைக்கரையில் தென்னந் சோலைகளும், மாஞ்சோலைகளும் கருப்பஞ் சோலைகளும் நிறைந்த நெல்லையம்பதியில் காந்திமதி சமேதராய் திருப்பள்ளி கொண் டருளிய திரிசடையோனின் கருணை கடாட்சமோ ; மந்திபாய் தர மதுத்திவலைகள் சிந்தும் சாலைக் குமரனுடையவோ. குறுக்குத்துறை ஐயனுடை யவோ அருட்பிரசாதமோ கிடை யாமல் வாழையடி வாழையாய் பார்ப்பாரும் கேட்பாருமற்று நோய், நொடி இத்யாதியின் இருப்பிடமாய் திகழ்கின்ற குறுந் துடையார்புரம் எனும் சேரிப்பதி யிலே தரித்திர நாராயணராய் சம்சார சாகரத்தில் உழன்று சுழன்று தவித்துவரும் நாற்சாதி யினும் கீழ்ச்சாதியான பஞ்சமர் வம்சா வழியில் ஒரு நாள்......

]இங்கேஇருந்து பல தாள்கள் காணப்பெறவில்லை. ஏகதேசம் ஐம்பது பக்கமாவது காணமல் போயிருக்க வேண்டும்]

* * *

திரு அவதாரப் படலம்

ஸ்ரீ மூலம் நட்சத்திரத்தில் சந் திரனும் சூரியனும் கூடுகின்ற சுபதினத்தில் ஆறுமுகம் என்ற பழனியாண்டிச் சாம்பானுக்கும், பழனியம்மாளுக்கும் புத்திர பாக்கியமாக, கிருஷ்ண பகவான் துஷ்ட நிக்ரக சிஷ்ட பரிபால னம் செய்வதற்காகத் திரு அவ தாரம் செய்ததுபோல, புதிய நந்தன் திருஅவதாரம் செய் தான்—சேரிமகன் ஆனதால் வருணாஸ்ரம தர்ம நியதிப் படி பேருக்குப் பின்னால் மரி யாதை விகுதி சேர்க்கப்பட வில்லை.

நந்தன் அவதரித்த நேரத் தில் வானம் குமுறவில்லை. வள மாரி பெய்யவில்லை. ஆறுவேத மும், அறுபத்தி நான்கு கலை ஞானமும் கற்றுத் தேர்ந்த புரோகிதர்கள் வேதம் ஓதி நல்ல சகுனம் நட்சத்திரம் பார்க்க வில்லை. ஆலாத்தித் தாலாட்டுப் பாடக்கூட நாதியில்லை. இவ் வாறாக வயல் வரப்பிலே புதிய நந்தனின் திரு அவதாரம் நிகழ்ந்தது.

பிறந்த நாள் முதல் நா ளொரு மேனியும் பொழுதொரு வண்ணமுமாக வளர் பிறை போன்று வானுற ஓங்கி வளரா விட்டாலும், கூழ் குழுவினியைக் குடித்து, மாயப் பிரபஞ்ச வாழ்க் கையில் உழன்று, வயலுக்குச் சென்று வரப்பு மிதித்து, கரம்பு தட்டி,ஏர்பிடித்து நாற்று நடுகை அறுப்பு, சூடு அடிப்பு, ஆகிய சேரிவித்தைகளைக் கற்றுத் தேர்ந்து பெரியவனானதும், சேரி சம்பிரதாயப்படி, நந்தன், வாலைக்குமரி வள்ளியைக் கை பிடித்து தாம்பத்ய வாழ்வில் கால்வைத்தான்—

[சேரியில் சைவ வைஷ்ணவச் சண்டை சச்சரவு கிடையாது போலும்].

இப்படியாகத்தானே அவர்கள் வாழ்க்கை நடத்தி வருங்காலத்

தில் திடீரென்று, வானம் பொழியாது, பூமி விளையாது பஞ்ச லட்சணம் தலை காட்டவும், கும்பிக் கூழுக்கும் கந்தல் கண்டாங்கிக்கும் சேரியில் பஞ்சம் வந்ததே. ஆடிக் காற்றில் அம்மி போல் ஆலைவாய்க் கரும்பாய் அலக்கழிந்தனர் நந்தனும் வள்ளியும்.

ஆதிசிவன், அயனுடை முப்பத்தி முக்கோடி தேவாதி தேவருக்கும் ஆடு கோழி வெட்டி, பொங்கல் படையல் போட்டு பூசனை செய்தனர் சேரி மக்கள். வருணகடாட்சம் மட்டும் இல்லாமல் போயிற்று. பண்ணையார்களாகிய பூலோக பிரமாக்களின் இ ந் தி ர போகமும் தொப்பை பெறுத்துத் தொந்தி சரிந்தது. சேரியில் நாய்கள் செத்து சிவலோகம் எய்தின. அ டு ப் பி லே அருகு பம்பி காளான்காடாய் மண்டியது.

* * *

வனவாசப் படலம்

கூனி செய்த சூ ட் சி ய ா ல் ராமன் வனவாசம் போனது போலோ, ஏழரை நாட்டானல் ஹரிச்சந்திரன் அரசபோகமிழந்தது போலோ அல்லாமல் வறுமையின் கொடுமையால் தனியராய்ப் புலம்பித் தவிக்கையில், சிவலோகம் வைகுந்தம ராஜ வைபோகம் தே யி லை த் தோட்டத்தில் இருக்கின்றன என கங்காணியான நாரதப் பிரம்மம் புழுக, தேவாமிர்தமான அந்த ஹிதோபதேசம் கேட்டு பசுமலை தேயிலைத் தோட்டத்திற்கு தானும் பிள்ளைகளும் தர்ம பத்தினியும் வாகன மார்க்கமாய்ப் பயணமானன் நந்தனென்பான். [இங்கேயிருந்து படலங்களே காணப்படவில்லை]

* * *

பரத்துக்கேறிய படலம்

[பரத்துக்கேறிய படலத்தின் மூலமாக ஆதியில் ஹிந்துவாக இருந்த இவ்வாசிரியர்,எஸ்டேட்டிற்குவந்ததற்கப்புறம்,நெஞ்சில் வஞ்சமும், கையில் பைபிளுமாக இந்தியாவில் நுழைந்த வெள்ளையர்களின் தொடர்பால் கிறிஸ்து மதத்தைத் தழுவியுள்ளார் என்பது ஆராய்ச்சிமூலம் புலனுகின்றது.]

ஆகோ கேளும் பிள்ளாய்; இப்படியாகத்தானே நந்தனுகப்பட்டவன், மனைவி மக்களுடன் நஞ்சினும் கொடிதான மழையிலும், பனியிலும் அல்லற்பட்டு அவதியுற்று வருங்காலத்தில், இரக்கமில்லா அரக்கர்களான துரையும், ரைட்டரும், கங்காணியும் அவனைத் துன்புறுத்தி வந்தனர்.

ஊராருக்குள்ள உ ண வை வயெல்லாம் ஒண்டியாக உண்டு வந்த பகாசுரனைப்போல், இமாலய பர்வதமாய் நவரத்ன கசிதமான மாளிகையிய் இருந்து கோபிகாஸ்திரீகள் சமேதராய் ராஜரீகம் செய்துவந்த துரையவர்கள், லாபத்தில் வெ ட் டு விழுவதைக் கணக்குப் பார்த்து நந்தனுடைய பிள்ளைகளோடு, எஸ்டேட்டுப் பிள்ளைகளுக்கும் தர்மம் செய்துவந்த மத்தியான

கூழ்க் கஞ்சியையும் கபளீகரம் செய்துகொண்டார்.

நந்தனும், தன்னையொத்த தொழிலாளர்களுடன் சேர்ந்து துரையிடம் போய் சாஷ்டாங்கமாய் நமஸ்காரம் செய்து தண்டனிட்டு முறையிட்டான்.

அடே தூர்த்தர்களா! விட்டேனு பார், தொழிலாளர் பலம் அதிகரித்துவிட்டதேஎன்றுசிங்கநாதம் செய்துவிட்டு, உங்களை நிர்மூலம் செய்யாமல் விடுவேனு என்று மேகத் தொனியேபோல் கர்ஜித்த வண்ணம் தனது மேஜை மீதிருந்த போனை எடுத்து சமிக்கை செய்ய மகா கோபத்துடனும், உக்கிரத்துடனும், குரூரமான ருத்ரமூர்த்திகளான 'காந்தி' தேச ரத கஜ துரக பதாதிகள் வந்து சேர்ந்து குரூரமான பாணங்களை எடுத்து வீசலாயினர். துப்பாக்கியஸ்திரம் பிரன்கன் அஸ்திரம், இவ்வாருக எண்ணுக்கடங்காத அஸ்திரங்கள் போர்க் களத்தில் நிராயுதபாணிகளாக நிற்கும் தொழிலாளர் படை மேல் பாயலாயிற்று.

அஸ்திரங்கள், இடி இடித்து மழைபெய்வதுபோன்று வியூகம் அமைக்கலாயின.

எரிந்து சுழன்றுகொண்டு பயங்கரமான ஓசையுடன் வந்த துப்பாக்கியஸ்திரம் ஒன்று கஞ்சிக்காக மன்ருடி நிற்கும் நந்தன் மார்பிலே பாய்ந்து முதுகிலே ஊடுறுவிப் போயிற்று.

கஞ்சி என்ருன் நந்தன்,

'கஞ்சி' என்று ஆர்ப்பரித்தார்கள் தொழிலாளர்கள்.

'கஞ்சியா?" என்ருர் கலியுக வரதனுன துரையவர்கள்.

துப்பாக்கியஸ்திரங்கள் நாகாஸ்திரங்கள்போல் பாய்ந்து வந்து தொழிலாளர்களைப் பக்கிகளைப் போல் கொன்று குவித்தது.

"கஞ்சி, கஞ்சி பிள்ளைகளுக்குக் கஞ்சி" என்று மலைகளும் பள்ளத்தாக்குகளும் எதிரொலித்தன.

குறிப்பு: இந்த இடத்திற்கு மேல் பிரதியில் இரத்தக் கறை அதிகப்பட்டு எழுத்துக்கள் உருவம் இழந்து காணப்பட்டதால் புலவரும் படுகாயமுற்று ஸ்தலத்திலேயே இறுதி எய்தியிருக்கலாம் என்று யூகிக்க இடமிருக்கிறது.

எல்லாம் சுட்டவர்களுக்குத்தான் வெளிச்சம்.

★ விவாத மேடை

புதுமைப்பித்தன்

தி. க. சிவசங்கரன்

2

சென்ற இதழ் 'சரஸ்வதி'யில் புதுமைப் பித்தன் படைப்புக்களின் சிறப்பைக் கூறினேன். இனி அவரது எழுத்துக்களிலும், தத்துவ விசாரத்திலும் உள்ள குறைகளைக் காண்போம்.

புதுமைப்பித்தனை நான் ஒரேயடியாகத் தூக்கி வைத்து எழுதியிருப்பதாக என்னிடம் ஒரு நண்பர் கூறினார்! எனக்குக் கொஞ்சம் கோபம் வந்தது.

புதுமைப்பித்தனை ஒரு சிலர் ஒரேயடியாகக் குழியை வெட்டி இறக்கப் பார்க்கிறார்கள்; நான் அப்படிச் செய்ய இயலாது. புதுமைப்பித்தனுக்கு உரித்தான மதிப்பை நாம் வழங்கத் தவறக் கூடாது; அவரது குறைகளையும் நான் மூடி மறைக்க விரும்பவில்லை; 'அடுத்த இதழ் வரும் வரை பொறுத்திருந்து முடிவு சொல்லுங்கள்' என்றேன் நான்.

* * *

புதுமைப் பித்தன் இலக்கியங்களிலுள்ள முக்கிய ஊனம், அவரது தத்துவ விசாரம்தான்.

மனித வாழ்வைப் பற்றியும் கலை இலக்கியத்தைப் பற்றியும் அவர் கொண்டிருந்த கருத்துக்கள் விபரீதமானவை; விசித்திரமானவை; தவறானவை.

புதுமைப்பித்தன் 'கலை கலைக்காகவே!' என்னும் கொள்கையுடையவர்.

'மனித குலம் முன்னேறும்; மனித சமுதாயம் வளர்ந்து, அக வாழ்விலும், புற வாழ்விலும் மேம்பட்டுத் திகழும்' என்னும் கொள்கையில் அவருக்கு நம்பிக்கை கிடையாது.

"மனிதன்! என்ன கம்பீரமான வார்த்தை!" என்று நாவலிக்கிறார் மாக்ஸிம் கார்க்கி.

"மனிதன் — அவனைப்போல் அசட்டுத்தனமான பிரகிருதிகள் கிடையாது. மனிதன் புழு!" என்று ஏசுகிறார் புதுமைப் பித்தன். நொந்துபோன உள்ளத்திலிருந்து வந்து விழும் வெம்பல் வார்த்தைகள் இவை! ஆம்; மனிதனைச் சிறுமைப் படுத்துவதோடு, தன்னையும் சிறுமைப் படுத்திக்கொள்ளும் வார்த்தைகள்! (ஆனால் இதை அவர் உணரவில்லை!)

"என் கதைகளில் ஒவ்வொன்றும் ஒரு விவகாரத்தைப் பற்றியதாக இருக்கும். ஆனால், என் கதைகளின் பொதுத்தன்மை நம்பிக்கை வரட்சி" என்கிறார் புதுமைப் பித்தன்.

புதுமைப் பித்தன் படைப்புக்களில் மிகவும் குணக்கேடான

அம்சம் இந்த "நம்பிக்கை வரட்சிதான்." தன்னம்பிக்கை யின்மைதான்.

'பொன்னகரம்' என்ற கதையில், மில்கூலியான அம்மாளு சீக்காய்க் கிடக்கும் கணவனுக்குக் கஞ்சி வார்க்க, தன் கற்பை முக்கால் ரூபாய்க்கு விற்கிருள்; புதுமைப்பித்தன் இந்த "விவகாரத்தைப் படம் பிடித்துவிட்டு, "கற்பு, கற்பு, என்று கதைக்கிறீர்களே, இதுதான் ஐயா, பொன்னகரம்!" என்று கதையை முடிக்கிருர்.

'தொழிலாளப் பெண்கள் சர்வசாதாரனமாகக் கற்பை விலே பேசுகிருர்கள்' என்னும் தவருன எண்ணத்தைத்தான் இந்தக் கதை, வாசகர்களுக்கு உண்டாக்கும்.

வறுமையின் கோரப்பிடியில் சிக்கி, கற்பை விற்கும் தொழிலாளப் பெண்கள் சிலர் உண்டு; ஆனால், எல்லா தொழிலாளப் பெண்களுமே மானத்தை விலே பேசக்கூடியவர்களா? கொடிய அடக்குமுறையிலும், போலீஸ் சித்திரவதையிலும் தலே நிமிர்ந்து நின்று, கண்ணின் கருமணி போல, தமது கற்பைக் காக்கும் ஆயிரக்கணக்கான தொழிலாளப் பெண்மணிகள் இல்லையா? வெள்ளேயன் ஆட்சியை ஒழிக்கவும், உள்நாட்டுக் கொள்ளேயர் சுரண்டலே ஒடுக்கவும் நூற்றுக்கணக்கான பாட்டாளிப் பெண்கள் கோவையிலும், மதுரையிலும், பம்பாயிலும், கான்பூரிலும் வீரப் போராட்டங்கள் நிகழ்த்தி தமது இன்னுயிரையும், தமது கணவன், மகன், சகோதரன், தந்தை ஆகியோரின் விலே மதிக்க வொண்ணு வாழ்வையும் தியாகம் செய்யவில்லேயா?...ஆனால், பாவம், புதுமைப்பித்தன் மனிதனின் சிறுமைகளே, தப்பிதங்களேத்தான் பார்க்கிருர்; மனிதனின் பெருமைகளே, வெற்றிகளே அவரால் பார்க்க முடியவில்லே; அவருடைய வாழ்க்கைத் தத்துவம் அவ்வளவு குருட்டுத்தனமாக இருக்கிறது; அவரது இலக்கியப் பார்வை அவ்வளவு மழுங்கலாக, ஒரு பக்கப் பார்வையாக, குறுகிக் கோணியதாக இருக்கிறது.

'மனித இயந்திரம்' என்னும் கதையில் வர்த்தக குமாஸ்தா மீனுட்சி சுந்தரம் பிள்ளேயின் வாழ்வைச் சித்திரிக்கிருர் புதுமைப்பித்தன்: வாழ்க்கையில் குட்டுப்பட்டுக் குட்டுப்பட்டு நொந்துபோன மீனுட்சிசுந்தரம், சிறிது கடைப் பணத்துடன் வெளியூருக்கு ஓடிப்போக முனேகிருர்; ஆனால் ரயிலடியில் ஒரு போலீஸ்காரரைக் கண்டதும் அவரது திட்டம் தவிடு பொடியாகி விடுகிறது; திரும்பவும் வாலேக் குழைத்துக்கொண்டு முதலாளியின் சேவகத்திற்குத் திரும்பி விடுகிருர்!...... தமது கதாபாத்திரங்களின் தோல்வியை, வீழ்ச்சியை படம் பிடிப்பதில் புதுமைப்பித்தனுக்கு அளவு கடந்த ஆனந்தம்!

'வாழ்வை, உண்மையை நேர் நின்று நோக்க வேண்டும்" என்கிருர் புதுமைப்பித்தன்.

ஆனல், அவருடைய கதாபாத்திரங்கள் வாழ்வை, உண்மையை, தைரியமாக நேர் நின்று நோக்குவதில்லை; எதிர்த்துப் போராடுவதும் இல்லை; வாழ்க்கையிலிருந்து தப்பி ஓடுவதுதான், ஏங்கி ஏங்கிப் பெருமூச்சு விடுவதுதான் அந்தப் பாத்திரங்களின் அலுவலாக இருக்கிறது.

இதுதான் புதுமைப்பித்தன் எழுத்துக்களிலுள்ள முரண்பாடு; அவருடைய தத்துவம் ஏங்கி ஏங்கிப் பெருமூச்சு விடும் மத்தியதர வர்க்கத்தின் கையாலாகாத தத்துவம்! பாட்டாளி வர்க்க உணர்வு அற்ற படிப்பாளியின் தத்துவம்!

'வாழ்க்கையைப் பார்த்து எழுதுவேன்; ஆனல் வாழ்வின் இருண்ட பகுதிகளையும், வறண்ட உள்ளங்களையும் இலக்கிய சிருஷ்டியாக்குவதே என் குறிக்கோள்'—இதுதான் புதுமைப் பித்தனின் பிடிவாதமான இலக்கியக்கண்ணேட்டம். இந்த வரட்டுப் பிடிவாதமும், வக்கரித்த இலக்கியத் தத்துவமும் பரிதாபத்திற்குரியன; முற்போக்காளர்களின் கண்டனத்திற்கு முற்றிலும் ஏற்றன. 'மக்களுடைய முன்னேற்றத்திற்காகவே கலை' என்னும் இலட்சியமுடைய எழுத்தாளரும், வாசகரும் இதை ஏற்றுக்கொள்ள மாட்டார்கள் என்பது திண்ணம்.

"...இவை யாவும் கலை உத்தாரணத்திற்கென்று கங்கணம் கட்டிக்கொண்டு செய்த சேவை அல்ல. இவை யாவும் கதைகள். உலகை உய்விக்கும் நோக்கமோ, கலைக்கு எருவிட்டுச் செழிக்கச் செய்யும் நோக்கமோ, எனக்கோ, என் கதைகளுக்கோ சற்றும் கிடையாது. நான் கேட்டது, கண்டது, கனவு கண்டது, காண விரும்பியது, காண விரும்பாதது ஆகிய சம்பவக் கோவைகள் இவை.

"...பொதுவாக என்னுடைய கதைகள் உலகத்துக்கு உபதேசம் பண்ணி உய்விக்க ஏற்பாடுசெய்யும் ஸ்தாபனம் அல்ல. பிற்கால நல்வாழ்வுக்குச் சௌகரியம் பண்ணிவைக்கும் ஏற்பாடு அல்ல. எனக்குப் பிடிக்கிறவர்களையும், பிடிக்காதவர்களையும் கிண்டல் செய்து கொண்டிருக்கிறேன். சிலர் என்னேடு சேர்ந்து கொண்டு சிரிக்கிருர்கள். இன்னும் சிலர் கோபிக்கிருர்கள். இவர்கள் கோபிக்கக் கோபிக்கத்தான் அவர்களை இன்னும் கோபிக்க வைத்து முகம் சிவப்பதைப் பார்க்க வேண்டும், என்று ஆசையாக இருக்கிறது. ஆனல் இப்படிக் கோபிப்பவர்கள் கூட்டம் குறையக் குறையத்தான் எனக்குக் கவலை அதிகமாகி வருகிறது"...(புதுமைப் பித்தன் எழுதிய 'காஞ்சனை'; கலைமகள் வெளியீடு)

புதுமைப்பித்தன் மேற்கண்டவாறு ஏன் எழுதுகிருர்?

காரணம், அவர் ஒரு தனி மனித வாதி (Individualist); அதாவது, தன் மனம்போன வாக்கில் ஒரு பொருளைப் பற்றி எழுத தனக்குப் பரிபூரண உரிமை உண்டு என்று வாதம்

செய்பவர். அவர் அழகைப் பற்றியும் எழுதுவார்; ஆபாசத்தைப் பற்றியும் எழுதுவார்; எதையும், எப்படியும் எழுதுவார்; ஒருவரும் அவரைக் குறைகூறக் கூடாது; கண்டிக்கக் கூடாது! தனி மனித வாதிகளுக்கு கும்பல் பிடிக்காது; கூட்டம் பிடிக்காது; மக்களுடைய கூட்டுச் சக்தியிலும், உழைப்பிலும், இயக்கத்திலும் அவர்களுக்கு நம்பிக்கை கிடையாது தனி மனித வாதிகளுக்குத் துணை சுத்த அறிவும், சுத்த அகங்காரமும்தான்!

புதுமைப்பித்தன் தனிமனித வாதி மட்டுமல்ல; அவர் ஒரு சந்தேக வாதி (Agnostic). அவருக்குக் கடவுள் மீதும் சந்தேகம்; மனிதன் மீதும் சந்தேகம்! இயற்கையின் மீதும் சந்தேகம்; விஞ்ஞானத்தின் மீதும் சந்தேகம்! பாஸிஸத்தின் மீதும் சந்தேகம்; கம்யூனிஸத்தின் மீதும் சந்தேகம்! 'நம்பிக்கை வரட்சியை' அடித்தளமாகக் கொண்டவர்களுக்கு யார்மீதும் எதன் மேலும் சந்தேகம் ஏற்படுவது இயல்புதானே?

சுருங்கச் சொன்னால், புதுமைப் பித்தன் ஒரு கருத்து முதல்வாதி (Idealist); கருத்து முதல்வாதம் முற்றிப் பழுத்த அராஜவாதமும் அவரது படைப்புக்களில் காணப்படுகிறது.

புதுமைப்பித்தன் சரித்திரத்திலும், பொருளாதாரத்திலும் பி.ஏ. பட்டம் பெற்றிருந்தாலும், சமூக விஞ்ஞான முறைப்படி சரித்திரத்தையோ, பொருளாதாரத்தையோ கற்றதில்லை. எனவே, தவறுகள் செய்தாலும், மனிதன் படிப்படியாக, உறுதியாக, கம்பீரமாக எப்பொழுதும் முன்னேறிக்கொண்டிருக்கிறான்; வானுயர வளர்ந்தோங்கிக் கொண்டிருக்கிறான் என்னும் தத்துவஞானமும், சரித்திர உணர்வும் அவருக்கு இல்லை. இதனால் தான் 'கலை கலைக்காகவே' என்னும் பிற்போக்குக் கொள்கையிலிருந்து அவரால் மீளமுடியவில்லை.

* * *

புதுமைப்பித்தனின் இலக்கிய வாழ்வு—அவர் எழுதிக்கொண்டிருந்த காலம் (1933 முதல் 1948 வரை)—15 ஆண்டுகள்; அதாவது அவரது இலக்கிய சேவை 27-ஆம் வயதில் தொடங்கி 43-ஆம் வயதின் முற்பகுதியில் முடிவுற்றிருக்கிறது.

புதுமைப்பித்தனைப் பத்திரிகை உலகிற்கு இழுத்து வந்தவர் சிந்தனையாளர் வ. ரா. (வ. ராமசாமி) என்பது வாசகர்களுக்குத் தெரிந்திருக்கும். வ. ரா. மகாகவி பாரதியின் பரமானந்த சீடர்; வாழ்க்கையிலும், மக்களிடத்தும் பெரு நம்பிக்கை கொண்டவர்; சிறந்த சீர்திருத்தவாதி.

வ. ரா. வால் பத்திரிகைத் துறையில் நுழைந்த ஒருவர், வ.ரா.வுடன் பழகிய ஒருவர் (புதுமைப்பித்தன்), 'கலை கலைக்காகவே!' என்று வாதாடுவதும், "நம்பிக்கை வரட்சியே என் கதைகளின் குணம்சம்" என்று துணிந்து கூறுவதும் விந்தைத்

யாக இல்லையா? உண்மை என்னவெனில், புதுமைப்பித்தன் 'ஊழியன்' பத்திரிகைக்கு வருமுன்பே, 1933க்கு முன்பே, தமது இலக்கியக் குறிக்கோளை வகுத்துக் கொண்டுவிட்டார்; அழுகுணிச்சித்தர் ஆகிவிட்டார்!

1933 முதல், 'ஊழியன்', 'சுதந்திரச்சங்கு' 'தினமணி', 'தினசரி' ஆகிய பத்திரிகைகளில் 12ஆண்டுகள் அலுவல் பார்த்திருக்கிருர் புதுமைப்பித்தன். 1945 முதல் 3 ஆண்டுகள் சினிமாத் துறையில் உழைத்திருக்கிருர். இந்தக் காலத்தில் உலக மக்கள் வாழ்விலும், நம் நாட்டு மக்கள் வாழ்விலும் எத்தனையோ புரட்சிகரமான மாற்றங்கள் நிகழ்ந்துள்ளன. ஆயினும் புதுமைப்பித்தனின் இலக்கியப் படைப்புக்களில் புரட்சிகரமான மக்களையோ, இயக்கத்தையோ நாம் தெளிவாக, உறுதியாக, திட்டவட்டமாகக் காணமுடியவில்லை. ஏன்?

இதற்கு இரு முக்கிய காரணங்கள் உண்டு. ஒன்று: 'கலை வேறு; அரசியல் வேறு' என்று புதுமைப்பித்தன் கருதினர். இதன் அடிப்படையாகத்தான் 'கலை கலைக்காகவே' என்னும் கொள்கை அவருள்ளத்தில் வேரூன்றியது. இரண்டு: புதுமைப்பித்தனின் தொழில் நிலைமையும், பொருளாதார நிலையும்.

இந்த இரு காரணங்களில், புதுமைப்பித்தனின் வாழ்க்கை நிலை (அவரது வேலை, சம்பளம், ஓய்வு ஆகியவை) அவரைப் பெரும்பாலும் பின்னுக்கு இழுத்தன என்று கூறவேண்டும்.

அந்தக் காலத்தில் 12 ஆண்டுகள் ஒருவருக்குத் தினசரிப் பத்திரிகையில் அலுவல் என்ருல்,' அது சர்க்கார் சிப்பந்தியைவிட மோசமானது என்றுதான் சொல்ல வேண்டும்.

சர்க்கார் சிப்பந்திக்காவது மாதா மாதம் ஒழுங்காகச் சம்பளம் கிடைக்கும். 1933ல் பத்திரிகைத் துறையில் இருந்தவர்களுக்கு அதுவும் கிடையாது.

சம்பளம்தான் ஒழுங்காகக் கிடையாது; வேலை நேரம், வேலை நிர்ணயம், வேலை நிரந்தரம் என்ருவது உண்டா? அதுவும் இல்லை.

அந்த நாளில் ஒரு உழைக்கும் பத்திரிகையாளன் (நாள்இதழில் அலுவல் பார்ப்பவன்) இரவும் பகலும் தந்திச் செய்திகளை மொழிபெயர்க்க வேண்டும்; 'புருப்' திருத்த வேண்டும்; எழுதி எழுதிப் பத்திரிகையின் பக்கங்களை நிரப்ப வேண்டும். ஆனல் மாதச் சம்பளம் 40 ரூபாய்கூட (இது என்உத்தேசக் கணக்கு; உண்மைச் சம்பளம் இதற்கும் குறைவாக இருந்திருக்கும்!) ஒழுங்காய்க் கிடைத்திருக்குமோ, என்னவோ?

1947 ஆகஸ்டில் சுதந்திரம் வந்த பிறகு, உழைக்கும் பத்திரிகையாளர் சங்கம், இயக்கம், கிளர்ச்சி, சட்டம் என்றெல்லாம் ஏற்பட்டு, இன்று உழைக்கும் பத்திரிகையாளர் நிலை ஓரளவு நன்ருயிருக்கிறது.

புதுமைப் பித்தன் 'தினமணி' யில் வேலை பார்த்த அந்தக் காலத்தில் (1933 முதல் 194

வரை) அவருடைய வாழ்க்கை நிலை எவ்வாறு இருந்தது?

அப்பொழுதுதான் புதுமைப் பித்தனுக்குத் திருமணம் ஆகியிருந்தது; மனஸ்தாபனத்தின் காரணமாக, குடும்பத்தின் ஒட்டுறவை அறுத்துக்கொண்டு, மனைவியுடன் புதுமைப்பித்தன் தன்னந் தனியாக, 'தினமணி'ப் பத்திரிகையை நம்பி சென்னையில் வாழ்க்கை நடத்துகிறார்! குறைந்த சம்பளம்; நிறைந்த வேலை; சம்பள பாக்கி; கடன்; வறுமை; மனைவியின் நகைகளை அடகு வைத்தும், விற்றும் வாழ்க்கை நடத்தவேண்டிய நிர்ப்பந்தம்—இந்த நிலையில் புதுமைப்பித்தனின் நெஞ்சில் கசப்பையும், சலிப்பையும், வெறுப்பையும், நிராசையையும் தவிர வேறு என்ன மிஞ்சி இருக்க முடியும்?

'வேலையுண்டு; வீடு உண்டு'—என்னும் போலிக் கௌரவத்துடன், போலி நிம்மதியுடன் வாழ்ந்து வரும் பெரும்பாலான மத்தியதர மக்களைப் போலவே வாழ்க்கை நடத்தினார் புதுமைப் பித்தன். அரசியல் நிகழ்ச்சிகளில் கலந்துகொள்ளவோ, அரசியல் போராட்டங்களில் ஈடுபடவோ அவருக்குத் தெம்பு இல்லை. 'உள்ள வேலையும் போய்விட்டால், குடும்பத்தை எப்படி நடத்துவது?" என்ற கவலைதான் அவருக்கு. ஆகவே, தந்திச் செய்திகளை மொழி பெயர்ப்பதோடு, அன்றாடப் பத்திரிகையைப் படிப்பதோடு அவர் தமது "அரசியல் நடவடிக்கை"யை நிறுத்திக் கொண்டுவிட்டார். 'அரசியல், சிறைவாசம்—இதெல்லாம் நம் உடம்புக்கு ஒத்துக்கொள்ளாது' என்று ஒதுங்கிக் கொண்டார் போலும்!

ஒதுங்கும் மனப்பான்மையும், தனிமை மனப்பான்மையும் புதுமைப்பித்தனைத் தனி மனித வாதியாக்கின.

சுத்த சுயம்பிரகாச இலக்கிய வாதி என்று தம்மை எண்ணிக் கொண்டு அவர் மக்களை விட்டு விலகி யிருந்தார்; மக்களுடைய பிரச்னைகளைப் பற்றி ஆழ்ந்து சிந்திக்காமல், தம்மைச் சுற்றிலும் நல்வாழ்வுக்காக மக்கள் இடைவிடாது போராடுவதைக் கண்டு புதிய ஒளி பெருமல், தன்னைப் பற்றியே கவலைப்பட்டுக் கொண்டிருந்தார் புதுமைப்பித்தன். ஆயினும், வாழ்க்கை அவரைச் சும்மா விட்டுவிடவில்லை. வறுமையும், பற்ருக்குறையும், பசியும், பட்டினியும், அவரை உலுக்கி எழுப்பின; அப்போதைக்கப்போது அவரது அகக் கண்களைத் திறந்தன; அவரது மனச்சாட்சி அவ்வேலைகளில் குமுறி எழுந்தது; அதன் விளைவாக 'பக்த குசேலா', 'நாசகாரக் கும்பல்', 'துன்பக் கேணி', 'மனித இயந்திரம்' 'பொன்னகரம்', 'கவந்தனும் காமனும்', 'நிசமும் நினைப்பும்' முதலிய கதைகளை எழுதினார் புதுமைப் பித்தன்.

ஆரம்ப காலத்தில் புதுமைப் பித்தனுக்கு மனச் சாட்சியின் உறுத்தல் அதிகமா யிருந்தது!

அநீதியையும், அக்கிரமத்தையும், அநாகரிகத்தையும் கண்டு மனம் புழுங்கினார் அவர்; வெளிப் பூச்சுக்காரர்களையும், பழமைவாதிகளையும் வெறுத்தார் அவர். அவருடைய உள்ளக் குமுறல்களை மேற்கண்ட கதைகளில் நாம் தெளிவாகக் கேட்கிறோம். இதற்காக அவரை நாம் மனமாரப் பாராட்டவும் செய்கிறோம்.

ஆனால் பிற்காலத்தில் அவருடைய மனச் சாட்சியில் ஒரு மாறுதல் ஏற்பட்டது; அவருடைய மனச் சாட்சியின் கூர் மழுங்க ஆரம்பித்தது; அவருடைய நியாய ஆவேசம் குன்றி வந்தது; சமூக அநீதியைப் பற்றி அவர் அவ்வளவாகக் கவலைப்படவில்லை. கிராமத்துப் பெருந்தனக்காரர்களையும், மிஷின் யுகத்தின் கொடுமைகளையும் கண்டித்தவர் தமது கண்டனத்தை நிறுத்திக்கொண்டார். அதற்குப் பதிலாக 'விபரீத ஆசை', 'கயிற்றரவு', 'காஞ்சனை', 'கட்டிலை விட்டிறங்காக் கதை' போன்ற கதைகளை எழுத ஆரம்பித்தார்!

முதலாளித்துவ-நிலப் பிரபுத்துவ எதிர்ப்பு நிலையை விட்டுப் பின்வாங்கி, பிற்போக்குச் சக்திகளோடும், கொள்கைகளோடும் சமரசம் செய்து கொண்டார் புதுமைப்பித்தன். சமரசம் செய்து கொண்டார் என்று சொல்வதைவிட, 'சரணாகதி' அடைந்தார் என்று கூறுவதே பொருந்தும்!

தனிநபர் வாதிகள் இந்த நிலையை எய்துவது இயற்கையே. தனித்த போக்கு அகம்பாவத்திலும், அழிவிலும்தான் கொண்டு போய்விடும். இதற்குப் புதுமைப்பித்தன் மட்டும் விதிவிலக்காக முடியுமா என்ன?

(அடுத்த இதழில் முடியும்)



படித்துவிட்டீர்களா?

1.	கம்யூனிஸ்ட் கட்சியின் அறிக்கை ... —மார்க்ஸ் ஏங்கல்ஸ் (பக். 94)	1	0	0
2.	கூலி உழைப்பும் மூலதனமும் .... —கார்ல்மார்ஸ் (பக். 80)	0	12	0
3.	தேசீய இனப் பிரச்சினை, சில விமர்சனக் குறிப்புகள் ... —லெனின் (பக். 55)	0	10	0
4.	அரசாங்கமும் புரட்சியும் .... —லெனின் (பக். 170)	1	8	0
5.	இடதுசாரி கம்யூனிசம் .... —லெனின் (பக். 167)	1	8	0
6.	மதத்தைப் பற்றி .... —லெனின் (பக். 95)	0	12	0
7.	இயக்க இயல் பொருள்முதல் வாதமும் சரித்திர இயல் பொருள்முதல் வாதமும்—ஸ்டாலின் (பக். 59)	0	8	0
8.	அராஜகவாதமா அல்லது சோஷலிசமா? —ஸ்டாலின் (பக். 92)	0	12	0
9.	முரண்பாட்டைப் பற்றி .... —மா சே-துங் (பக். 56)	0	7	0
10.	சீனப் புரட்சியும் சீனக் கம்யூனிஸ்ட் கட்சியும்—மா சே-துங் (பக்.41)...	0	6	0
11.	பண்டைக்கால இந்தியா ... —டாங்கே (பக். 312)	3	0	0

வியாபாரிகளுக்குத் தக்க கழிவு உண்டு

கிடைக்குமிடம்: **நியூ செஞ்சுரி புக் ஹவுஸ்**
199, மவுண்ட்ரோடு, சென்னை-2

சிறுகதை

பூ வாங்கலியோ, பூ...

— ஜெயகாந்தன் —

சிவன் கோயிலில் சந்தியா கால பூஜைமணி கிணு கிணுத்தது. கர்ப்பக்கிருக இருளில் சுடர்விடும் தீபவொளியைத் தெருவில் நின்றே தரிசித்தான் ராசாக்கண்ணு.

"அரகரா... அரகரா..." என்ற முணுமுணுப்பு வெளியிலும் கேட்டது. ஆராதனை முடியும் வரையில் கண் இமைகளில் ஈரம் கசிய நின்றிருந்த ராசாக்கண்ணு, ஆராதனை முடிந்ததும் தனக்கு முன் கிடந்த 'பின்புறப் பிறைவடிவப் பாஷன்' பாதுகையை இழுத்துக் காலில் மாட்டிக்கொண்டான். இடுப்பில் சுற்றிய துண்டை உதறித் தோளில் போட்டுக்கொண்டான். முழங்கையில் களிம்பேறிய தூக்குச் சட்டி இடிபட்டது. "ஹூம்... தூக்குச் சட்டியெ வெளக்கனும்! நாலு நாளுக்குமேலே ஆகுது. நிதம் வெளக்க நம்மாலே ஆகுதா?...... எல்லாம் அவள் இருந்தால்..." ஒரு பெருமூச்சு; நடந்தான்.

"பூ வாங்கலியோ, பூ..." என்ற குரல் கேட்டதும் நெற்றிப் பொருத்தில் கல்லடி பட்டது போல் ஒரு விநாடி நிலை குலைந்து போனான்.

"பூ வாங்கலியா, பூ..." அவள் தன்னைத்தான் கேட்கிருள் என்று அவனுக்குத் தெரியும். அவளைத் திரும்பிக்கூடப் பார்க்காமல் 'விறு விறு' வென்று நடந்தான்.

"பூ வாங்கலியா, பூ... பூ வாங்கலியா, பூ..." மண்டை வெடித்து விடும்போல் இருந்தது அவனுக்கு. மேல் துண்டை எடுத்துத் தலையில் இறுக்கிச் சுற்றிக் கொண்டு வேகமாய் நடந்தான். தெரு முனையில் நின்றான், அவனே ஒரு முறை தனக்குள் சொல்லிக்கொண்டான்: "பூ வாங்கலியோ, பூ..." அவன் குரல் விக்கி விக்கி அடைந்தது.

தலைப்பாகையை அவிழ்த்து முகத்தை அழுத்தித் துடைத்துக் கொண்டான். அவன் முதுகு விரிந்து விரிந்து சுருங்கித் தோள்கள் இரண்டும் குலுங்கின. மேல்துண்டின் ஒரு முனையைச் சுருட்டி வாயில் அடைத்துக் கொண்டான். தெரு விளக்கின் வெளிச்சத்தில் அவன் முகத்தில் குழம்பி இருந்த கண்ணீர் 'மினுமினு'த்தது.

* * *

சிவன் கோயிலை அடுத்திருந்த தீப்பெட்டித் தொழிற் சாலையில் ராசாக்கண்ணு வேலை செய்து

வந்தான். கிட்டத்தட்ட பதினைந்து வருஷமாக ராசாக்கண்ணுவுக்கும், அந்த ஊரின் ஸ்தல விருக்ஷமான பாதிரி மரத்தடியில் எழுந்தருளி, சக்தியுடன் அமர்ந்திருக்கும் சர்வேச்வரனுக்கும் பரிச்சயம் உண்டு.

பளபளவென்று ஜ்வலிக்கும் பித்தளைத் தூக்குச் சட்டியில் பழைய சோற்றுப்பாரம் கனக்க நெற்றியில் விபூதிப் பட்டை துலாம்பரமாகத் துலங்க, அரை நிஜாரும் முண்டா பனியனுமாக அவனுக்கு வேலை கிடைத்த முதல் நாளன்று கோயிலின்முன் வந்து நின்று அவசர அவசரமாகக் கடமைக்கு ஒரு கும்பிடு போட்டுவிட்டு ஓடினபொழுது அவனுக்கு வயது பதினைந்து. அன்றிலிருந்து அந்த சர்வேச்வரனின் சக்தியில் அவனுக்கு அசைக்க முடியாத நம்பிக்கை. தனக்கு ஒரு நல்ல இடத்தில் வேலை கிடைக்க வேண்டுமென்று அவன் செய்த பிரார்த்தனைகள் அவனுக்கு மட்டும் தானே தெரியும்!—சர்வேச்வரனுக்கும் தனக்கும்தான் தெரியும் என்பது அவன் நம்பிக்கை.

காதுக்குக் கீழே இறங்கிய நீண்ட கரிய கிருதாவும், கூரிய மூக்குக்கடியில் மறைந்து கிடக்கும் அரை மீசையும், பிடரியை மறைத்து எழுந்து நிற்கும் காலர் ஷர்ட்டும், பம்பாய்க் கரை வேஷ்டியின் 'மெட்ராஸ் கட்டும், காலில் ரப்பர் ஷூவுமாகக் கோயிலே கண்ணுக்குத் தெரியாமல், கோயிலுக்கு வந்து செல்லும் குமரிகளை வட்டமிட்ட ராசாக்கண்ணு, சர்வேச்வரனை விட்டு விலகிவிடவில்லை; மறந்திருந்தான்! அப்பொழுது அவன் 'இளவெட்டு!'

கொஞ்ச நாட்களுக்கெல்லாம் அவன் எப்படியோ மாறிவிட்டான்!

பக்தி சிரத்தையோடு கையில் பூவும் பழமும் கொண்டு ஞானும்பாள் பின்தொடர, மேல் துண்டை இடுப்பில் சுற்றிக் கொண்டு வெள்ளிக்கிழமை தோறும் வந்து அர்ச்சனை செய்த ராசக்கண்ணுவையும்—இன்று, தெருவிலேயே நின்று சேவித்து, இதயப் பாரத்தை மட்டும் கர்ப்பக் கிருகத்தில் அவனுக்கு விதித்திருக்கும் எல்லையையும் மீறி சர்வேச்வரனின் பாதார விந்தங்களில் இறக்கி வைத்துவிட்டு கண்ணீர் கசிய சில வினாடிகள் தன்னையும் மறந்து தூங்காமல் தூங்கி, பிறகு விழித்து இறக்கிய பாரத்தை ஏற்றிக்கொண்டு விதி வழி செல்லும் இன்றைய ராசாக்கண்ணுவையும் — அபேதமான, அறிவின் கண்களுக்கு அப்பாற்பட்ட, மனம் செய்யும் சித்து விளையாட்டின் மாயையான, சூட்சுமமான, சுயம்புவான, 'சுமை தாங்கி'யுமான அந்த சர்வேச்வரன் மட்டும்தான் அறிந்து வைத்திருந்தான். ஆம், அவன் மனித வாழ்க்கையோடு விளையாடுபவன் அல்லவா? விளையாடி வேதனைப்பட்டு, விலகி நின்று வேடிக்கை பார்த்து, விதியாய் விதிவழியாய் இருப்ப

வனல்லவா ?— அவனுக்குத் தெரியும்!

சந்நிதித் தெரு முனையில் பூக் கடை வைத்திருக்கும் பூவாயிக்கு ராசாக்கண்ணுவைப் பற்றி என்ன தெரிந்திருக்க முடியும்? தினசரி மாலை நேரங்களில் ஓர ணுவுக்கு மல்லிகையோ, கதம் பமோ வாங்கித் தூக்குச் சட்டி யில் போட்டுக்கொண்டு வீடு செல்லும் ஒரு வாடிக்கைக்காரன் என்றுமட்டுமே தெரியும். சில நாட்களாக, இரண்டு வாரங்க ளாகவே அவன் பூ வாங்குவதை நிறுத்திவிட்டான்,

"பூ வாங்கலிங்களா, பூ..." என்று அவனையே பார்த்துப் பல முறை கேட்டாள் பூவாயி. அவன் திரும்பிக்கூடப் பார்ப்ப தில்லை.

வீட்டுக்கே எவளாவது வாடிக் கையா கொண்டுவந்து கொடுக் கிறாளோ, என்னவோ?..." என்று நினைத்தாள் பூவாயி.

சாயங்காலம் அவனுக்காகத் தனியாய் இரண்டு முழம் தொடுத்து வைத்திருப்பாளே, அதற்காகவாவது அவன் ஒரு வார்த்தை சொல்ல வேண் டாமோ? "இன்னைக்கி நல்ல ரோசாப் பூ இருக்கு... இன்னைக் கிக் கதம்பம் வாங்கிக்கிட்டுப் போங்க... ரெண்டு மருக் கொழுந்தும் வெக்கறேனே..." என்றெல்லாம் வேண்டி வேண்டி வியாபாரம் பண்ணும் கலையில் கைதேர்ந்த பூவாயிக்குத் தன் னிடமிருந்து ஒரு வாடிக்கைக் காரன் நடுவில் போவது ரொம்ப வருத்தமாய் இருந்தது.

"என்னைக்காவது ஞாபக மற தியா அந்த வாசமில்லாத காட்டுமல்லிச் சரத்தைக் குடுத் திட்டேனா?" அவள் தன் மன சில் என்ன நினைத்தாலும், ராசாக்கண்ணு சாயங்காலத்தில் வீடு திரும்பும் நேரத்தில், கள்ள மற்ற தனது இனிமை மிக்க குரலில், "பூ வாங்கலியா, பூ..." என்று ராகம் இழுப்பதை நிறுத் திக்கொள்ள வில்லை.

"பூ வாங்கலியா, பூ..."

பதிலில்லை!

ஒருநாள்... இரண்டு நாள்... மூன்று, நான்கு, ஐந்து... ஒரு வாரம்... பத்து நாள்... பதி னைந்து...

அவள் கோரிக்கை தொடர்ந்து அலட்சியம் செய்யப்பட்டு, நிரா கரிக்கப்பட்டு வந்தது!

தன்னைவிட நல்ல பூ கொடுப் பவள் யாராக இருக்க முடியும்? எப்படியும் அவனிடம் வியாபா ரத்தை மீண்டும் தொடங்கிவிட வேண்டும் என்று சங்கற்பித்துக் கொண்டாள் பூவாயி

* * *

பாடலீசுவரர் சந்நிதியின் சந் தியாகால பூஜா மணிநாதமும், கர்ப்பக் கிருகத்தில் புகைந்து எரியும் நிவேதன ஜோதியும், பூவாயியின் குரலும் அவளிடம் வாங்கும் பூவும் அவன் தினசரி வாழ்விலிருந்து பிரிக்க முடியா திருந்தன.

இப்பொழுது மட்டும் திடீ ரென அவனுக்கு என்ன வந்து விட்டது? யந்திரம்போல் வந்து நிற்கிறான். தேய்ந்து போன மனித ராசிபோல், சமுதாயத்

துக்கு உழைத்து நைந்து துரோகம்செய்யப்பட்ட தியாகிபோல் விடாப்பிடியாக சேவை செய்து வரும் செருப்பைக் கழட்டிவிட்டு கரங்கூப்பி நிற்கிருன். ஆண்டவனேடு ஆத்மா லயிக்கவில்லே. மனம் பாண்டி விளையாடுகிறது. எண்ணங்கள் தத்துவப் புரவி மீது சவாரி விடுகிறது.

'இருளில் ஐக்கியமாகி இருளேயாகி, ஒளியிற் சுடராகி ஒளியேயாகி, ஜீவனில் பரமாகி ஜீவனேயாகி, தாய்க்கு மகவாகித் தாயேயாகி,பெண்ணுக்குஆணுகி பெண்ணேயாகி... பெண்ணேயாகி...

'பெண்ணேயாகி பிறகு என்னவாளுள்?

தூணில் புதைக்கப்பட்டிருந்த சம்புடத்திலிருந்து விபூதியைக் கைநிறைய எடுத்து தலேயை அண்ணுந்து வெறிபிடித்தவன் போல் நெற்றியில் தேய்த்துக் கொண்டான்.

'பெண்ணேயாகி வந்தவள்?...' என்று மனம் வலே பின்ன ஆரம்பித்தது.

இப்படித்தான் மண்ணுப் போனு, போ...' என்று கையிலிருந்த விபூதியைக் காற்றில் ஊதிவிட்டு, கண்களேத் துடைத்துக்கொண்டான். அவன் பார்வை கர்ப்பக் கிருஹத்தில் வெறித்தது. நிவேதன ஜ்வாலே துடித்தது. ஈசனின் உருவத்தில் இருள் தெறித்துச் சிதறியதுபோல் தீப ஜோதி கனன்று கருமை படர்ந்தது.

அவன் கும்பிடவுமில்லே, கும்பிடாமலுமில்லே. அவன் மனம் அந்தச் சர்வ வல்லமை படைத்த மூலசக்தியிடம் எதையும் பிரார்த்திக்கவுமில்லே; பிரார்த்திக்காமலும் இல்லே. நின்றிருந்தான்—தன்னேமறந்து எதையோ நினேத்து மறுகிய வண்ணம் நின்றிருந்தான்.

இடுப்புத்துண்டு மேலுக்குஏறியது. கழட்டிவிடப்பட்ட செருப்பும் மனச் சுமையும் மீண்டும் அவனேடு ஒட்டிக் கொண்டன. வீடு நோக்கி நடக்க இரண்டடி வைத்தான். எதையோ மறந்து எங்கோ வைத்துவிட்டது போன்ற உணர்ச்சி. கோயில் மணி 'டாண் டாண்......' என ஒலித்துக் கொண்டிருந்தது. அதில்கூட என்னவோ சப்தநயம் குறைந்திருந்தது 'பூ வாங்கலியோ, பூ......' அந்தக் குரலேத்தான் காணேம். அவன் பார்வை பூக்கடையின் மீது, பூவாயியின் மீது விழுந்துநிலேத்தது. அவள் அவனேயே பார்த்துக் கொண்டிருந்தாள். அவள் பார்வையில் ஒரு பரிவு, மஞ்சள் பூசிப் பளீரிடும் வதனம்; நெற்றியில் ஒளிவீசும் குங்குமப்பொட்டு; சிகையில் குலுங்கிச் சொரியும் மல்லிகைச் சரம்; கழுத்தில் மின்னும் மஞ்சள் சரடு.........அவன் பிரக்ஞையற்றவன் போல் கடையை நோக்கி நடந்தான்.

"பூ வேணுங்களா?..." என்று கனவிலிருந்து விழித்தவள் போல் துடி துடிப்போடு கேட்டாள் பூவாயி.

"ஆமாம்..." என்று தலேயை ஆட்டினுன் ராசாக்கண்ணு.

"ஒரணுவுக்குக் குடுக்கட்டுங்

களா ?......நல்ல கதம்பமுங்க... இந்த ஊரெல்லாம் தேடினலும் கெடைக்காது...நல்ல மல்லிகை இருக்கு...அதிலே ஒரு முழம் குடுக்கட்டுங்களா ? கொஞ்ச நாளா நீங்க வர்ரதே இல்லியே..." அவளுக்கு ஏற்பட்ட சந்தோஷம் அவள் வார்த்தைகளில் துடித்தது. அவள் அடைந்த வெற்றி மனசில் குதித்தது.

"ஒரு முழம் கதம்பம், ஒரு முழம் மல்லிகை..." அவன் குரலில் ஏன் அத்தனை நடுக்கம்.

"இத்தினி நாளு வேறே எங்கனுச்சும் வாங்கனீங்களா ?....'

'இல்லே..."

"பின்னே ?"

"சம்சாரம்...சம்சாரம் இல்லே ; ஊர்லே இல்லே... ஊர்லே இல்லே..."

"ஒஹோ !"

"இதென்ன, இவ்வளவு பூ..."

"பரவாயில்லீங்க, அம்மா ஊர்லேருந்து வந்திருக்காங்க. சந்தோஷமா வச்சிக்குவாங்க..." அவள் சிரித்தாள்.

அவன் சிரிக்க முயற்சித்தான். உதடுகள் துடித்தன.

"நாளேக்கு வெள்ளிக்கிழமை. அம்மாவோடெ வருவீங்க" அவன் பதில் ஒன்றும் பேசவில்லே.

'மனச்சுமை, மலர்ச்சுமை !' தொண்டையில் விரக்தி சிரித்தது. நடந்தான், அவசர அவசரமாய் நடந்தான்.

'என்ன இவ்வளவு வேகம் ?'

'வீட்டுக்குப் போகவேண்டாமா ? அவள் தெரு வாசற்படியில் காத்திருப்பாள்.'

'எவள் ?'

வீதி முனேயில் விளக்குக் கம்பத்தடியில் நின்று அந்த வீதியிலிருந்து பிரியும் மறு தெருவின் மறு கோடியில் தெரியும் வீட்டைப் பார்த்தான்; இருளின் கரியதிரை கவிந்து கிடந்தது.

'விளக்கு இல்லே ; ஆமாம்... வீட்டு விளக்கு, வாசல் விளக்கு, இதயவிளக்கு, இன்பவிளக்கு...' அவன் சிரித்தான்.

'ஏன் சிரித்தேன்?'

'அழுவதைவிட, சிரிப்பது நல்லது அல்லவா ?' தூக்குச் சட்டியைத் திறந்து பார்த்தான். கதம்பமும் மல்லிகையும் அவனேப் பார்த்துச் சிரித்தன. தூக்குச் சட்டியை மூடிவிட்டு முகத்தைத் தேய்த்துக் கொண்டான். உதட்டைக் கடித்துக் கொண்டு, புறங்கையால் மூக்கைத் தேய்த்து உறிஞ்சினன்.

என்ன செய்து என்ன பயன் ? —கடைசியில் கண்ணீர் வந்தே விட்டது. வீட்டை நோக்கி, அந்த இருளே இலக்காகக் கொண்டு வேகமாய் நடந்தான், ஏன் ?—வாய் விட்டு அழுவதற்குத்தான்.

* * *

மறுநாள்......

மாலே நேரம்; சிவன் கோயில்; சந்தியாகால பூஜை; கோயில் மணியின் நாத ரீங்காரம்; கர்ப்பக் கிருக நிவேதன ஜோதி; பக்தகோடிகளின் முணுமுணுப்பு எல்லாம் இருந்தன. ஒன்று

இல்லை, ஒன்றே ஒன்று இல்லை; இல்லவே இல்லை!

ராசாக்கண்ணு விழித்தான்.

"பூ வாங்கலியோ, பூ..." அந்தக் குரலைக் காணோம்; பூவைக் காணோம்; பூவாயியைக் காணோம் அவன் கண்கள் பரக்க பரக்கத் துடித்தன. அவனுக்கு இன்று பூ வேண்டும். அவசியம் வேண்டும் பூ இல்லாமல் பேரக மனமில்லை, பூக்கடையும், பூவும், 'பூ வாங்கலியோ, பூ'...என்ற குரலும், பூவாயியும் அவனை ஏமாற்றி விட்டுச் சிரிப்பதுபோல் இருந்தது.

சற்றுத் தூரத்தில் ஒரு கிழவன் பூ விற்றுக் கொண்டிருந்தான்.

"இந்தக் கடைக்காரி எங்கே?" என்று விசாரித்தான் ராசாக்கண்ணு.

"எங்கிட்டேயும் நல்ல மல்லிகை இருக்கு, கதம்பம் இருக்கு; மருக்கொழுந்து இருக்கு......" என்று வியாபாரம் பண்ண ஆரம்பித்தான் கிழவன்.

'ஒரணாவுக்கு மல்லிகை குடு'

பூவாயியின் குரல் அவன் செவிகளில் மோனமாய் ஒலித்துக் கொண்டிருந்தது.

"பூவாயி எங்கே... அந்தக் குரலுக்கு என்ன நேர்ந்தது?' என்று அவன் மனம் புலம்பியது. அன்று அவன் வீதிமுனையில் நிற்கவில்லை. தூக்குச் சட்டியைத் திறந்து பார்க்கவில்லை அவசர வேகமாய் வீட்டுக்கு ஓடவில்லை. தளர்ந்து மெள்ள நகர்ந்தான்.

"மூளை ரொம்பச் குழம்பிப் போச்சு!" என்று முனகிக் கொண்டான்.

"ஞா ஞ ம் பா ..." என்ற நீண்ட பெருமூச்சு இதயத்தில் ஆழ்ந்து அவலமாய் ஒலித்தது. அவன் வெகுதூரத்தில் நடந்து கொண்டிருந்தான்.

அதன் பிறகு, தொடர்ந்து பல நாட்களாய் பூவாயியின் குரலை அவன் கேட்கவே இல்லை. அவனால் பூ வாங்காமலும் இருக்க முடியவில்லை.

மலர்ச்சுமை, மனச்சுமை!... இரண்டும் குவிந்துகொண்டே இருந்தன.

* * *

அன்று ஞாயிற்றுக்கிழமை. ராசாக்கண்ணு வீட்டிலிருந்தான்.

'கோயிலுக்குப் போகவேண்டும்; பூ வாங்கிக்கொண்டு வர வேண்டும்'.

'ஏன்?... ஏன் பூ வாங்கி வர வேண்டும்' என்று தனக்குள் நசிகேதத்தனம் பண்ணிக் கொண்டிருக்கையில், "பூ வாங்கலியோ. பூ..." என்ற குரல் தெருவில் ஒலித்தது.

ராசாக்கண்ணுவின் முகம் மலர்ந்தது. அவசரமாக ஓடிக் கதவைத் திறந்தான்.

அவன் வீட்டருகே ஒலித்தது. வாசலில் நின்று பார்த்தான். அங்கு இடுப்பில் பூக் கூடையுடன் நின்றிருந்தது யார்? பூவாயியா?...

அவள் முகத்தில் மஞ்சளின் திவ்யக் கறையைக் காணோம். நெற்றியில் திலகம் இல்லை...

பூ வா யி யின் தலையிலேயே பூவைக் காணோம்!

"பூ வாங்கலியோ..." ராசாக் கண்ணுவின் முகத்தைப் பார்த்ததும் அவள் குரல் அடைத்துப் போயிற்று.

"பூவாயி, என்ன இந்தக் கோலம்?" என்று பதறினான் ராசாக்கண்ணு.

அவள் முன்தானையால் முகத்தை மூடிக்கொண்டு விம்மி அழுதாள்.

"அவரு...அவரு...எங்க ஐயா போயிட்டாருங்க..."

ராசாக்கண்ணு முகத்தை மறுபுறம் திருப்பிக் கொண்டான். அவள் விம்மும் குரல் அவன் பிடரியைத் தாக்கிற்று.

"ரெண்டு நாளு காச்சலிலே என்னெ மோசம் பண்ணிட்டாரு..."

"உலகத்திலே எல்லோரும் மோசக்காரங்கதான்."

துயரமற்ற விரக்தி அவன் குரலில் கரகரத்தது. சற்று நேரம் அவர்களிடையே ஆழ்ந்த மௌனம்; அமைதி!

"கதம்பம் குடுக்கட்டுங்களா?"

"உம்..."

"நான் அம்மா கிட்டேதான் குடுப்பேன். இப்போ கடையெ எடுத்துப்பிட்டேன். வீட்டுக்கு வந்து அம்மாகிட்டேயே குடுத்துடறேன்..." என்று சொல்லிக் கொண்டே வாசலைக் கடந்து உள்ளே நுழைந்தாள் அவள்.

"அம்மா...அம்மா... பூ வாங்கிறீங்களா, பூ..." பதில் இல்லை.

"அம்மா...அம்மா"

ராசாக்கண்ணு தெருவாசற்படியில் நின்று 'கடகட'வென்று சிரித்தான்.

'என்ன சிரிக்கிறீங்க?"

"அழறதைவிடச் சிரிக்கிறது நல்லது."

"நீங்க என்ன சொல்றீங்க?"

"உன் நிலைதான் என் நிலையும்."

"ஐயோ!..." அவள் பதறிப் போய்க் கூடத்தைப் பார்த்தாள்.

கூடத்து மூலையில் இரண்டு பட்டுப் புடவைகளும் அதன் மீது சில வளையல்களும் தாலிச்சரடும் அடுக்கி வைக்கப்பட்டிருந்தன. அதற்கு நேரே சுவரில் அவன் மனைவியின் படம் இருந்தது. அதைச் சுற்றிக் கதம்பமும், மல்லிகையும் உலர்ந்து உதிர்ந்து சிதறிக் கிடந்தன.

அவள் கைகூப்பி நின்றாள்.

"அம்மா நீ பாக்கியசாலி."

அவன் சிலையாய், மரமாய், ஓடமாய் நின்றான். அழவுமில்லை சிரிக்கவுமில்லை.

"சரி, பூ குடுத்துட்டுப் போ.."

ஒரு முழம் கதம்பத்தை அவளிடமிருந்து வாங்கும்பொழுது அவளை உற்று நோக்கினான் அவன். அவள் முகம் சிவந்தது; கண்கள் கலங்கின.

"பூவாயி, எல்லோருக்கும் பூ கொடுக்கும் நீ..."

"அதுக்குக் குடுத்து வைக்கலிங்களே..."

அவன் கைகள் பூச்சரத்துடன் அவள் முகம் நோக்கி உயர்ந்தது.

'பூவாயி, நீ கொடுத்து வச்சதுதான்..." அள்ளிச் செருகிய

அவள் கூந்தலில் கதம்பத்தைச் சூட்டினான் ராசாக்கண்ணு.

"ஐயோ, இதென்னங்க?.;... அவள் குரல் நடுங்கிற்று. தலை நிமிரவில்லை. கைகள் உயர்ந்து தடுக்கவில்லை. உடல் பதறிப் பின் வாங்கவில்லை...

ராசாக்கண்ணு முகத்தை மூடிக் கொண்டான்.

தெரு வாசற்படியில் நின்று சுற்றும் முற்றும் பார்த்த பூவாயி, கண்களைத்துடைத்துக்கொண்டு தெருவைக் கடந்து வேகமாகப் போய் விட்டாள். ராசாக்கண்ணு வெளியேவந்து பார்த்தபொழுது அவள் கூந்தலில் சூட்டிய பூச் சரம் ஒரு கொத்துச் சிகையுடன் கசங்கிக் கிடந்தது.

ராசாக்கண்ணு மௌனமாய் நின்றான்.

"பூ வாங்கலியோ, பூ..." பூவாயியின் குரல் வெகு தூரத்தில் ஒலித்தது. முன்போல் அதில் குதூகலமும் துடிப்பும் இல்லை. நடுக்கமும் பவ்யமும் இழைந்து கரகரத்த பூவாயியின் குரல் வெகு தூரத்தில் தேய்ந்து ஒலித்து ஒலியிழந்து ஒடுங்கியது!

அதன் பிறகு அவன் அவளைப் பார்க்கவே இல்லை. அந்தக் குரலைக் கேட்கவே இல்லை!